தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து செல்வேன் !
ஏற்றதொரு கருத்தை
என(து)
உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன் ; எவர்
வரினும்
நில்லேன் ; அஞ்சேன் !"

உள்நாடு (இலங்கைஉட்பட) விலை இரண்டணு. | வெளி நாடு: மூன்றணு. அலுவலகம்: 'தென்றல்' சென்னை—6

மலர் 1	சென்னை	2—4—1955	சனிக்கிழமை	இதழ் 40

பாவைக் கூத்து

மரகதமணி! சுகம், துக்கம், நலம்,

நலிவு, இவை பற்றி மட்டுமே கடிதமெழுதிக்கொண்டிருந்த நீ, இந்த முறை உன் கடிதத்தின்மூலம் என் இதயத்திலே ஆச்சரியக்குறிகளை விதைத்துவிட்டாய். உன்னிடமிருந்து இப்படி ஒரு கடிதம் வருமென்று நான் எதிர்பார்க்கவே இல்லை. பி. ஏ. பட்டம் பெற்றவுடன் 'சர்வீஸ் கமிஷன்' பரீட்சை எழுதி ஏதாவது ஒரு சர்க்கார் உத்தியோகத்திற்குப் போய்விடுவாய்என்றுதான் நான் நினைத்தேன். உன் தந்தையோ மாவட்டக்கழகத் தலைவர். மேலும், அவரை, வடித்தெடுக்கப்பட்ட தீவிர வாதி என்று நமது வட்டாரத்தில் பேசிக்கொள்கிருர்கள். அவரின் ஒரே மகனுன நீ, கண்டிப்பாக உத்தியோக வேட்டையிலிறங்கிவிடுவாய்என்றுதான்நான் நினைத்தேன்-நான் மட்டுமென்ன ; நமது குழுவினர் அனைவருமே அப்படித்தான் நினைத்தார்கள். கடலூர் நண்பர் வரதன், உனது கண்டிப்பான வாழ்க்கை முறையையும், நண்பர்கள் உள்ளத்தில் 'சுளீர்' என்று படும் வகையில் பேசும் மனுேபாவத்தையும் குறித்து கிண்டல் செய்வதை நீ இன்னும் மறந்திருக்கமாட்டாய் என்றுதான் நினைக்கிறேன். நான்கூட உன்னைப் பற்றித் தவருக எண்ணியதுண்டு. 'நண்பர் மரகதமணி பாடப்புத்தகங்களை மட்டும் படிக்கிருரே, கல்லூரி விரிவுரையாளர் சொல்லுகின்றவைகளைப் படித்தால் போதுமென்று கருதுகிருரா, ஐயோ, பாவம், பொது அறிவு பூஜ்யமாகிவிடப் போகிறதே' என்று எண்ணிப் பல முறை உன்னைப் பற்றிக் கவலைப் பட்டிருக்கிறேன். பொதுவாழ்வில் பங்கேற்று முதுகெலும்பு முறிய பணியாற்ருவிட்டாலும் 'செலவு செய்யப் பணமிருந்தால் போதும் உலகஅறிவு தேவையில்லை' என்று கூறித்திரியும் 'செல்லப்பிள்ளை'களின் பட்டியலில் நீ சேராதிருந்தால் போதும் என்றுகூட நான் ஆசைப்பட்டிருக்கிறேன். ஆனுல், நேற்று வந்திருக்கும் உன்னுடைய கடிதம் என் உள்ளத்தை அமுதில் தோய்த்து எடுத்துவிட்டது. என் முகத்தை முற்றுகையிட்டபுதுக்களை எங்கிருந்தோ 'சிரஞ்சீவி' வரம் பெற்று வந்துவிட்டதைப்போல ஆட்டம் போடுகிறது.

எந்தக் கட்சியைப் பற்றியும் தெரிந்தேகொள்ளாத நீ, திடீரென்று அரசியலில் பங்குகொள்ளப்போவதாக உன் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிருய். நம்மைச் சார்ந்தவர்களின் எண்ணிக்கை உத்தியோகத் துறையிலே மிகக் குறைவுதான் என்ருலும், உன்னைப் போன்ற வசதிமிக்கவர்கள் உத்தியோகத்திற்குப் போகாததால் குறையேதும் ஏற்பட்டுவிடாது என்பது என் சொந்தமுடிவு. செல்வக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உத்தியோகத்திற்குப் போவதைவிட முற்போக்கு உள்ளம் கொண்டவராகி பொதுவாழ்வில் புகுவதால் அதிகமான அளவுக்கு நாட்டுக்கு சாதகமுண்டு என்று எண்ணுவோரின் பட்டியலைச் சார்ந்தவன் நான். தமிழகத்து அரசியல், நிலையழிந்து இருப்பதற்குக் காரணமென்னவென்று நினைக்கிருய்? கட்சிக்கு நல்ல தலைவர்களில்லையா? தென்னகத்தில் புத்திசாலிகளுக்குத்தான் பஞ்சமா? அப்படி நீ கருதினுல் அது பெரும் தவறு! பொதுவாழ்வு ஆசை கழுத்தைப் பிடித்துத் தள்ளுகிறது; அதே கழுத்தை, குடும்ப பாரமும், அதையழுத்தும் வறுமையும் குன்ற வைக்கின்றன. இதுபோன்ற இடுக்கண் மிகுந்த கட்டங்களில் தென்னுட்டு அரசியல்வாதி சிக்கிக்கொள்கிருன். பெண்டுபிள்ளைகளின் கண்ணீரையும் துடைக்கவேண்டும், பொதுப்பணியும் புரியவேண்டும். இந்த நேரத்தில்தான் சூழ்நிலையின் காரணமாக திரைமறைவில் தவறு செய்ய நேரிடுகிறது. அவ்வாறு தவறு செய்யும்போது அவன் அதுவரை ஆற்றியிருக்கும் பொதுப் பணிக்குக் களங்கம் ஏற்படாமல் போகாது! பெரும்கறை பூசப்பட்டே தீரும்! செம்மலைச் செல்லாக்காசாக்கி செகம் ஒதுக்கி வைத்துவிடுகிறது. அன்பு நண்பா, இது தென்னுட்டின் அரசியல்வாதிகளின் நிலை! வட நாட்டிலே இப்படி அல்லவே! பெரும்பாலும் வசதிமிக்கவர்கள் தான் அரசியலில் பங்கேற்று வருகிருர்கள்! எங்காவது ஒரு மூலையில் 'வறுமை தோய்ந்த ஒரு திரு. வி. க., வடநாட்டில் இருந்தாலும் சுற்றியுள்ள சீமான் தலைவர்கள் அந்தத் திரு. வி. கவை, ஒரு பெரு. வி. க. வாக ஆக்கிவிடுகிருர்கள். அதனுல்தான் வடக்கத்தித் தலைவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கமுடிகிறது; ஆதிக்கம் செலுத்தவும் அவர்களின் தோணி இடம் தருகிறது. நெடுநாளைய இந்த வேதனையின் பாற்பட்ட என் கருத்துத்தான் செல்வக் குடும்பத்துப்பிள்ளைகள் தூய்மையான பொதுவாழ்வில் - முற்போக்கு எண்ணத்தைப்பரப்பும் பணியில் ஈடுபட்டால் நாட்டின்வளம் விரைவிலே பெருகும் என்பது!

தென்றல்
பேராசிரியர் மலர்.
ஏப்ரல் 12உ அன்று
எங்கும் கிடைக்கும்
விலை அணு எட்டு.

உன்னுடைய துணிவானபோக்கை நான் இரு கையேந்தி வரவேற்கிறேன்; என் இதயங் கனிந்த நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறேன்; ஆனுல், அரசியலில் நுழையப்போகும் நீ முதலில் எந்தக் கட்சியில் சேர்ந்து பணியாற்றப் போகிருய் என்பதை பன்முறை சிந்தித்து, அதன்பிறகு முடிவுக்கு வா! அவசர முடிவு அபகீர்த்தியைத் தேடித் தந்தால் இன்றைய அரசியல் உலகில் அது விந்தைக்குரியதாகிவிடாது.

இன்று வரையில் நீ, எந்தக் கட்சியை உனக்குப் பிடித்தமானதாகத் தேர்ந்து வைத்திருந்தாலும் என் பணியை என்றும் நான் செய்துமுடிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுகின்ற காங்கிரஸ் கட்சி, அடுத்து ஆளப்போவதாகக் கனவிலும் நினைவிலும் எண்ணி எண்ணி உருகிக்கொண்டிருக்கும் பொதுவுடமைக்கட்சி, ஒன்ருக இருந்து உட்பூசலுடன் வாழ்வதைக் காட்டிலும், பிரிந்திருந்து ஒற்றுமையாக வாழமுடியும் என்று கூறும் திராவிடர் இயக்கம் இவை மூன்றில் ஒன்றைத்தான் நீ தேர்ந்தெடுத்திருப்பாய் என்பதை நானறிவேன் என்ருலும் முதல் இரண்டு கட்சிகளைப் பற்றி உனக்கு ஓரளவு சொல்லலாமென்றுஎண்ணுகிறேன்- பெரிதும் விரும்புகிறேன்.

தென்னுட்டில் பொதுவுடமைக் கட்சியின் நிலை என்ன, அதன் தோல்விக்குக் காரணமென்ன என்பது பற்றியும், தென்னுட்டுக்கு காங்கிரஸ் இயக்கம் தேவைதானு என்பது பற்றியும் '**பாவைக்கூத்து**' என்ற தலைப்பில் உனக்கு பத்துக் கடிதங்கள் எழுதலாமென்று முடிவுகட்டித்தான் இந்த முதல் கடிதத்தை எழுதத் துணிந்தேன். உயிரற்ற பொம்மைகளை வைத்துக் கொண்டு திரைக்குப் பின்னிருந்து சூத்திரக்கயிற்றின் துணைகொண்டு ஆட்ட நினைக்கிருர்கள் மேற்கண்ட இரண்டு கட்சிகளின் வடநாட்டுத் தலைவர்கள் என்ற கருத்தை உள்ளடக்கித் தான் இந்தக் கடிதங்களின் தொடர்ச்சிக்கு '**பாவைக் கூத்து**' என்று பெயரிட்டிருக்கிறேன். கடிதங்களைத் தொடர்ந்து படி! கருத்து மாறுபட்டால் உனக்குத் தெரிந்த வேறு சில நண்பர்களோடு கலந்து பார்! நீ புரிந்துகொள்ளும்படி எழுதவேண்டுமே என்பதற்கு அண்மையில் நடந்த ஆந்திரத் தேர்தல்வரையிலுமுள்ள அரசியல் நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்ட முடிவுசெய்திருக்கிறேன். என்னுடைய கடிதம் ஒவ்வொரு வாரம் சனிக்கிழமைக்குள் நிச்சயம் கிடைத்துவிடும். நீ மட்டும் படிக்கத் தவறிவிடக்கூடாது! நீ ஏற்கனவே கட்டியுள்ள முடிவுதான் சரி என்று கருதி, புதருக்குள் பிரவேசம்

முதல் கடிதம்

செய்துவிடாதே! எச்சரிக்கிறேன்! இது இருபதாம் நூற்ருண்டு! தியா கத்தையும், தொண்டையும் ஓ ஒரு 'விழுக்காட்டி'ன் உதவி பலிகொண்டுவிடும் புரட்சி ருண்டு இது! நினைவி வருகிறேன்; வணக்க

அண்ணாத்துரை சுயநலக்காரர் என்றும், தி. மு. கழகம் பணம் சம்பாதிக்கிறது என்றும் சில 'சோற்றுச்சுவர்கள்' வசைபொழிந்தது, பொதுமக்கள் காதில் ஒரு துளியாவது விழுந்திருக்கும். நாட்டிலே இருக்கிற நாலாந்தர அரசியல் வாதிகள் சிலர், இயக்கத்தின் வளர்ச்சியில் பொருமையுற்று, அந்தத்தீ, தங்கள் மனதை எரிக்க, மேற்படி வார்த்தைகளைத் தாங்களும் வீச ஆரம்பித்தனர். இதைப் பொதுமக்களில், மந்த மதி படைத்தோர்கூட நம்பவில்லை என்றாலும் உண்மை என்ன என்பதை நாம் சொல்லவேண்டிய நேரம் வந்திருக்கிறது.

அண்ணாத்துரையின் அரசியல் வாழ்வு முழுமையும் தன்னலத் துறப்பாகவே இருந்தது; இருக்கிறது. அவர் தனக்கென ஏதாவது வைத்துக்கொள்ள வேண்டும் சொத்து-சுகம் என்பதையெல்லாம் கனவிலும் கருதுவதில்லை. பண வகையிலே பற்றற்ற வாழ்வு அவர் வாழ்வு. தனது தேவைகளை அவர் கவனிப்பதில்லை. இயக்கம்,இயக்கத்தின் தேவைகள், கொள்கை-கொள்கைக்கு பலம், இவையே அவரது அன்றாட சிந்தனைகள். அதனால், அவர், கையில் அரைக்காசுமின்றி கடன் கேட்க மனமுமின்றி, பலகாலம் வாழ்ந்திருக்கிறார். இன்றைக்கும் அவர் கையிலிருக்கும் ஒரே சொத்தான திராவிடநாடு அச்சகம்தான் அவருக்குச் சோறு போடுகிறது. சினிமா உலகம் அவரைப்பணக்காரராக்கி விடவில்லை அவரது உழைப்பைத்தான் பெற்றது என்பதை உடனிருந்து பழகியோர் அறிவர்.

அவரிடமிருந்த சின்ன இந்துஸ்தான் கார் ஒன்று, இரண்டு லட்சம் மைல்கள் வரை ஓடி அவருக்குப் பணிபுரிந்த பெருமையோடு ஓய்வு கொண்டுவிட்டது. இப்போது பழைய ஸ்டுடிபேக்கர் கார் ஒன்று அவருக்கு உழைக்கிறது. அதுவும், கழகம் கொடுத்ததல்ல என்பதை நினைவுறுத்திக்கொள்ள வேண்டும். இந்த நேரத்திலேகூட, "இயக்கம் எனக்கு என்ன செய்தது?" என்று கேட்கவில்லை அவர். "இயக்கத் தோழர்களே! எனக்கு வெள்ளி மலர்களை அள்ளிவீசுங்கள்!" என்று அறிவிக்கவில்லை அவர் தனக்குக் கார்-வாங்க வீடு வாங்க உதவி கோரவில்லை அவர்.

ஆனால், உதவி கோரும் அறிக்கை ... மிருந்துவெளிவரவில்லையா? ... ந்தது! யாருக்கு உதவி ... ல்லூரியில் பயிலும் ஏழை ... நக்கு உதவி கோரி!

முன்பொருமுறை காஞ்சியில் கலைவிழா நடத்தி பெரும் பணம் சேர்த்து-காலணாவும் சிதறாமல் கல்லூரிக்குத் தந்தார். இதோ! இப்பொழுதும் 30-4-55 முதல் 5-5-55 வரை கலைவிழா நடத்தி கல்லூரிக்குத் தருகிறார். அதற்காக, தான் செய்துகொள்ளவேண்டிய வைத்தியத்தைக்கூட ஒத்தி போட்டிருக்கிறார். தன் காரை எடுத்துக் கொண்டு அலைகிறார். பெட்ரோல் கூட தன் கைப்பணத்தாலேயே போட்டுக்கொள்கிறார். பொதுநலப் பணியில் அவரது இதயபூர்வமான ஈடுபாடு,அவரை அவ்வாறு செய்யத் தூண்டுகிறது:

கழகத்திற்குச் சொத்துத் தேவைப்படும்போது, பொதுமக்களுக்கும் அவசரத்தேவை எற்பட்டால், கழகச் சொத்துக்கு வழி செய்வதில்லை அவர்; பொது மக்களுக்கே சேர்த்துத் தருவார்.

கட்சிக்கு பெரிய தினசரி நடத்தப் பணமில்லை - அதே நேரத்தில் தஞ்சை, திருச்சி புயல் நிவாரணத்திற்குப் பணம்வேண்டும். அப்போது கட்சித் தேவையை மறந்தார். தஞ்சை திருச்சிக்குப் பணம் சேர்த்து, கைத்தறி ஆடையாக சுமார் இருபத்தையாயிரம் ரூபாய்களுக்கு வாங்கித் தந்தார்.

இதுபோன்று ஆயிரம் குறிப்பிடலாம்: அவரது தனி வாழ்விலும், யாராவது பணம்கேட்டால் கையிலிருப்பதைக்கொடுத்துவிடுவார். அத்தகைய பெருந்தகையை நாக்கில் நரம்பின்றி, பணம் சேர்ப்பதாகக் கூறிற்று இழிதகைக் கூட்டம்.

இதோ! நாட்டுப் பெருங்குடி மக்கள், அண்ணாரது பொதுநலப் பணியையும் தியாகத்தையும் கண்ணாரக் காண்கிறார்கள். காஞ்சிக் கல்லூரி அந்தப் பயனை முழுதும் பெறுகிறது. பொதுமக்களே! இந்தக் காரியத்திற்கு,

நீதி மிகுந்தவர் போற்றுவைதாரீர்!

நீதி குறைந் தவர் காசுகள் தாரீர்!

கல்லூரிகளின் செழிப்பில்தான் நாட்டின் வளப்பம் இருக்கிறது. அண்ணா துவக்கியுள்ளஇந்தக் காரியத்திற்கு அனைவரும் ஆதரவு தர வேண்டும்.

அடுத்து இன்னொன்று.

இப்படியே அண்ணா, பொது நலத்திற்குச் சேர்த்துத் தந்து விட்டு தனக்கென ஏது மில்லாதிருப்பதை திராவிட முன்னேற்றக் கழகம் கவனிக்க வேண்டும்.

முழு நேர உழைப்பையும் இயக்கத்திற்குத் தந்துள்ள ஒரு தலைவர் எப்படி வாழ்கிறார், என்ன வேண்டும் அவருக்கு என்பதை எண்ணிப் பார்க்காமல் இருக்கக் கூடாது. அவர் கேட்டால், அள்ளித்தர, பொதுமக்கள் தயார் தான். அவர் கேட்பாரா? கண்டிப்பாகக் கேட்க மாட்டார்! கேட்கமாட்டார் என்பதற்காக நாமும் பேசாமலிருப்பதா?

இதை, புதிய பொதுக் குழுவின் முதற் கூட்டம் கண்டிப்பாக ஆராய்ந்தாக வேண்டும். அவருடைய வாழ்க்கைக்கு குறைந்த பட்ச வசதியை யாவது செய்துதர வேண்டும். அந்தப் பணி துவங்கினால், தென்றல், முதலிலேயே தனது தொகையை அனுப்பிவைக்கும். இதை, புதிய பொதுக் குழுவிற்கு வரப்போகும் உறுப்பினர்கள் கவனிப்பார்கள் என்று 'தென்றல்' முழு மனத்தோடு நம்புகிறது.

நாங்களும் நீங்களும்

வாசக நண்பர்களுக்கு வணக்கம். தென்றலின் இந்த இதழ் நாற்பதாவது இதழாகும். இதுவரை தென்றலைப் படித்துப் பாராட்டும் உங்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறோம். தென்றலிலே பல புதிய பகுதிகளைச் சேர்க்க ஆசை கொண்டோம். அதன்படி சில பகுதிகளையும் தோற்றுவித்தோம். ஆனாலும் அவற்றைத் தொடர்ந்து ஒவ்வொரு இதழிலும் வெளியிட முடியாதபடி இடப்பற்றாக்குறை செய்துவருகிறது. அதனால்தான் சில தொடர் பகுதிகளை சில சில இதழ்களுக்கு ஒரு முறை வெளியிட்டு வருகிறோம். தொடர்கதையையும், வெண்பாப் போட்டியையும் மட்டுமே தொடர்ந்து வெளியிட்டு வருகிறோம். இன்னும் சில புதிய பகுதிகளை அவ்வப்போது கொடுத்து வருவோம் என்பதையும் கூறிக்கொள்கிறோம்.

வெண்பாப் போட்டிக்கு பிரமாதமான வரவேற்புக்கொடுக்கிறீர்கள். நன்றி! இலக்கியப் பரிசுத் திட்டம் பற்றி உங்களிலே சில மாணவத் தோழர்கள், தங்களுக்கு இப்போதுதான் ஓய்வு கிடைத்திருக்கிறதென்றும் முடிவு தேதியைக் கொஞ்சம் நீட்டிக்குமாறும் கேட்டிருக்கிறார்கள். அதன்படி, 30-6-55 தேதியை முடிவு தேதியாக நிர்ணயித்திருக்கிறோம். 23-4-55 உ இதழில் இலக்கியப் போட்டியின் நீதிபதிகள் விபரமும் பரிசு வழங்குவோர் விபரமும் வெளிவரும்.

தென்றல் பேராசிரியர் மலர் எட்டணா விலையில் 12-4-55 உ வெளிவருவது நீங்கள் அனைவரும் அறிந்ததே! அதற்கு நீங்கள் தரும் வரவேற்புக்காண மனம் பூரிக்கிறோம். 'அந்த மலருக்காக 9-4-55உ இதழும் 16-4-55உ இதழும் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். 'ஆசிரியத் தோழருக்கு...' என்ற பகுதிக்கு உங்களில் பலர் பயனற்ற விவரங்களை எழுதி அனுப்புகிறார்கள். அப்படி இல்லாமல் பொதுப் பிரச்சனைகளைச் சுருக்கமாக எழுதி அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம். வெண்பாப் போட்டியை வெறும் கார்டில் எழுதி அனுப்பினால் போதும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

கட்டுரை, கதை, கவிதை அனுப்புகின்ற நண்பர்கள் அவசரப்பட வேண்டாம். தென்றலில் பக்கங்கள் குறைவு. நல்ல விஷயங்கள் அவ்வப்போது இடம் பெறும். ஒவ்வொரு வாரங்களில் தென்றல், ஒரு நாள் கால தாமதம் ஆவது பற்றியும் எழுதுகிறீர்கள். அச்சிடும் பிரதிகளின் எண்ணிக்கை அதிகம். இயந்திர வசதியோ குறைவு. ஆகவே சில சமயங்களில் தாமதம் தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இனி அவ்வாறு நேராமல் கவனிப்போம்.

உங்களில் பலரின் விருப்பத்திற்கிணங்க 'கழகச் செய்திகள்' என்ற பகுதியை தென்றலில் ஆரம்பித்துள்ளோம். அந்தப் பகுதியில் கழகச் செய்திகள் இடம் பெறுகின்றன. செய்திகள் அனுப்புவோர் சுருக்கமாகவும், தெளிவாகவும், ஒவ்வொரு சனிக்கிழமைக்குள்ளும் அனுப்பவேண்டுகிறோம்.

இயக்கத் தலைவர்கள்மீது தாக்குதல் நடத்தும் பத்திரிகைகளுக்குப் பதில் எழுதுமாறு உங்களில் அநேகர் கேட்கிறீர்கள். அது தேவையில்லை என்று நாங்கள் கருதுகிறோம். நிற்க,

தென்றலை இன்னும் மிகச் சிறப்பான முறையில் கொண்டுவர இயந்திர வசதிக்கு முயன்று கொண்டிருக்கிறோம். நிர்வாகத்தை இலாகா அடிப்படையில் பிரித்து சிறப்பான முறையில்நடத்தஎற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். கடிதங்களுக்குக் காலத்தோடு பதில் வருவதில்லை என்று குறைபடும் நண்பர்கள் அதுவரை பொறுத்தருள்க.

அறிவிப்பு

தென்றல் பேராசிரியர் மலர், 12-4-55 அன்றுவெளிவருவதால் 9-4-55 இதழும் 16-4-55 இதழும் நிறுத்தப்பட்டுள்ளன. சந்தாதார்களுக்குமலர் அனுப்பப்படும். சந்தாவில் கழித்துக் கொள்ளப்படும்.

'சிலப்பதிகார ஆராய்ச்சி'

பன்மொழிப் புலவர்:

கா. அப்பாத்துரையார் எழுதுகிறார்

23-4-55 *இதழில் ஆரம்பமாகிறது.*

இலக்கியத்தில்
சுவையான செய்திகள்

அரசன் மகள் அவள்! அவள் ஆசிரியன் ஒரு ஆரியன்! அரசாங்கப் புரோகிதனும்கூடத்தான்! கல்வி கற்க வந்த காவலன் மகள் மேல், காதல் தோன்றுகிறது காகுபட்டன் பரம்பரையானுக்கு! எண்ணத்தைச் சொன்னால் எது நேருமோ வென்று பயப்படுகிறது அவன் கோழை உள்ளம்! ஆனால் ஆசை வெள்ளம் அதையெல்லாமா பொருட்படுத்துகிறது? அரசன் மகளாக இருந்தாலும் ஆண்டியின் அருந்தவப் புதல்வி(!)யாக இருந்தாலும் அவள் அழகாகவோ அல்லது பருவக்கோட்டிலோ நின்று கொண்டிருந்தால் கரைபுரண்டு வந்து விடுகிறதே!

மன்னன் மகளின் மறுவற்ற மேனியில் மாமோகம் கொண்டான் மறையோன்! மனதைத் திறந்து கேட்க மனம் வரவில்லை அவனுக்கு. அச்சம் கீழே இழுக்கிறது. ஆசை மேலே உந்துகிறது. என் செய்வான் ஏழைப் பிராமணன்! கட்டுப்படுத்த எண்ணம் கொண்டால் நிலைமையை எப்படியோ சமாளித்துக்கொண்டு போயிருப்பான். ஆனால் அந்தணர்கள் ஆசையை அடக்கித் தங்களுக்குள் அடிமையாக்கிக்கொண்டார்கள் என்று எந்த வரலாறும் இல்லையே! அப்படியிருக்க இந்த ஆரியனுக்கு எப்படி ஆசையைக் கட்டுப்படுத்தும் திறனிருக்கப் போகிறது? ஆகவே, ஆசைக்கு அடிமையானான். அரசன் மகளை அடைய எண்ணம் கொண்டான்!

கல்வி கற்றுவிட்டுப் போய்விட்டாள் காவலன் மகள். கவலையோடு உட்கார்ந்திருந்தான் ஆரியன். "ஆகா என்ன அழகான பெண். அழகுச்சிலையான அவளை அறிவின் தலைவனான நான் அடைந்தால், பின்வரும் சந்ததி என்ன பெருமையுடையதாகத் திகழும்! அழகும் அறிவும் ஒருங்கே அமையப்பெற்ற பரம்பரையாக வல்லவோ இருக்கும்! ஆயினும், நானோ எடுதூக்குபவன்; அவளோ, நாடாள்பவனின் மகள். இருந்தால் என்ன.....எப்படியும் அவளை அடைந்தே தீரவேண்டும்! அதற்கு வழி...! அரசன் தன் மகளைக் கைவிடவேண்டும். ஆதரவற்ற நிலையில் அவளைத் திண்டாடச் செய்யவேண்டும். அதன் பிறகு என் எண்ணத்தை அவளிடம் கூறி அவளை என்னுடையவளாக ஆக்கிக் கொள்ளவேண்டும்!" என்று எண்ணினான். எண்ணத்தைச் செயலிலே காட்ட ஒரு தீர்மானம் செய்துகொண்டு அரண்மனைக்குச் சென்றான். அரசன் ஆரியனை வரவேற்று "என்ன விசயம்" என்று கேட்டான்,

"அரசே இன்று நான் அகஸ்மாத்தாக தங்கள் மகளின் ருது ஜாதகத்தைப் பார்க்கும்படி நேரிட்டது. பெண் ருதுவான நேரம் அவ்வளவு சிலாக்கியமானதாத் தெரியலே எனக்கு!"

"சிலாக்கியம் இல்லையா!"

"ஆம் அரசே, ருதுவானதிலே தோசம் இருக்கு!"

"அதனால் ஆபத்துஎதாவது...?"

"ஆபத்தா.....ஐயோ.....அதைச் சொல்லக்கூட எனக்குப் பயமாயிருக்கே!"

"பயப்பட வேண்டாம்; பாதகம் ஒன்றும் செய்யமாட்டேன்."

"நாடிழந்து நீ நாதியற்றவனாகப் போனால்கூட நான் ஆச்சரியப்பட மாட்டேன்!"

"என்ன...!"

"நான் சொல்லவில்லை. உன் புதல்வியின் ருதுஜாதகம் சொல்கிறது அப்படி!"

"இதற்குப் பரிகாரம் எதாவது.."

"இருக்கிறது. ஆனால், உன் உள்ளம் அதற்கு இடம் கொடுக்காது."

"அக்கினியில் மூழ்க வேண்டுமா, அல்லது ஆண்டவனுக்கு ஆயிரம் அபிசேகம் செய்யவேண்டுமா!"

"அக்கினியில் மூழ்கு என்றால் கூட அட்டியின்றி ஆண்டவனை நினைத்துக்கொண்டே மூழ்கிவிடுவாயே! அபிசேகத்துக்கு என்ன குறைச்சல், அறம் அறிந்த அரசன் நீ அரசாளும்போது......! நான் சொல்லப்போவது..."

"தயக்கம் வேண்டாம் தாராளமாய்ச் சொல்லலாம்."

"உன் புதல்வியை..."

"என்ன செய்யவேண்டும்?"

"அவளை ஒன்றும் செய்யவேண்டாம். அவள் உயிருக்கோ உடலுக்கோ, எந்தவிதத் தீங்கும் நேரிடக்கூடாது. அவளை ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டி ஆற்றில் விட்டுவிட வேண்டும். அவளோடு உனக்கு வர இருக்கிற கெட்ட காலமும் சேர்ந்தே போய் விடும்!"

"பெண்ணாகப் பிறந்தும் ஆணைப் போல் வளர்க்கப்பட்ட என் அருமை மகளையா ஆற்றில்விடச் சொல்கிறீர்."

"பெண் பிள்ளையை ஆற்றில் அனுப்ப இப்படித் தயங்குகிறாயே. ஆண்பிள்ளையாக இருந்தால் ஆவியையே விட்டுவிடுவாய் போலிருக்கிறதே!"

"பெற்ற பிள்ளையை நட்டாற்றில் விட எவர் மனம்தான் ஒப்பும்."

"ஏன், கர்ணனை ஆற்றில்விட்ட குந்திதேவி இல்லையா."

"கள்ளத்தனமாகப் பெற்ற குழந்தையாதலால் அடுத்தவர் காவைமுன் காணாற்றில் விட்டுவிட்டாள். இது அப்படியல்லவே!"

"உனக்கும் உன் நாட்டுக்கும் உன் மகளால் வர இருக்கிற கேட்டை உணர்ந்து உன்னிடம் உரைத்தேன். அறிவுரையை அலட்சியம் செய்ததுமின்றி புராணமங்கையை இழிவாகவும் பேசத் துணிந்தனை. சீக்கிரமே இந்நாடு சீரழியும் என்பதை உன் வார்த்தைகளே நிரூபித்துவிட்டன. நான் வருகிறேன்."

"கோபம் வேண்டாம் பிராமணோத்தமரே. பெற்றபாசம் அல்லவா? அதனால் சற்றுத் தடுமாறிவிட்டேன். மன்னித்துவிடுங்கள். உங்கள் இஷ்டம்போலவே செய்கிறேன்."

"பரவாயில்லை.பகவான் மன்னிப்பாராக...!"

அரசன்,புரோகிதன் சொல்படியே தன் மகளை ஒரு பெட்டியில் வைத்து. ஆற்றில் விட்டுவிட்டான்.ஆரியனுக்கு அளவிலா மகிழ்ச்சி.ஆற்றில் அரசன் மகள் செல்லும் பெட்டியைப்பிடித்து பேரழகியைவிடுவித்து, பெண்டாட்டியாக்கிக் கொள்ளலாம் என்று எண்ணியிருந்தான் ஆரியன்.அவன் எண்ணம் போலவே நடந்ததனால் ஆரியனுக்கு மகிழ்ச்சி உண்டானதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

சற்றுநேரம் கழித்து தன் திட்டப்படியே ஆற்றோரமாகச் சென்றான் பெட்டியைத்தேடி. தேடிவந்த பொருள் தென்பட்டது. உள்ளத்தில் உவகை உண்டாயிற்று. அரசனின் அறியாமையையும் தன் அறிவாற்றலையும் எண்ணி அகமகிழ்ந்தான். "நேரம் கழித்துக் கிளம்பியும் கடலில் சென்று, காணாமல் போகாமல், பெட்டி என் கண்களுக்குத் தென்பட்டது கடவுளின் கருணையேயாகும். என் மனத்திற்கும் மணத்திற்கும் மகேஸ்வரன் ஒத்துத்தான் இருக்கிறான்." என்று எண்ணினான் அப்பாவி ஆரியன்! ஆனந்தமுடன் கரைக்குக் கொண்டுவந்து அகமகிழ்வுடன் பெட்டியைத் திறந்தான்!

இவனுக்கு முன்பே வேறொருவன் அரசனோ அல்லது வேடனோ வேட்டையாடி வரும்பொழுது இந்தப் பெட்டியைக்கண்டு,பெட்டியிலிருந்த பெண்ணுக்குப் பதிலாக தான் வேட்டையாடிக்கொண்டு வந்திருந்த உயிருள்ள புலியை அதனுள் வைத்துவிட்டு, அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு சென்றுவிட்டான். அது இவனுக்கு எப்படித் தெரியும்? பொய்யும், புனைசுருட்டும் கூறி பொதுமக்களை ஏமாற்றத் தெரியுமே தவிர உண்மையை உணரும் சக்தியற்றவர்களாயிற்றே ஆரியக்கூட்டத்தினர்! ஆகவே, அச்சம் ஏதுமின்றி ஆனந்தத்துடன்பெட்டியைத் திறந்தான். அந்தோ, பரிதாபம்! வேட்டையாடியவர்களால் வாட்டிவதைபட்டு, வயிற்றுக்கு ஏதுமின்றி உறங்கிக்கொண்டிருந்த புலி, இந்த உத்தமனின் நற்செய்கையால் உறக்கம் நீங்கி உரத்துடன் பாய்ந்தது அவன்மேல்! பதறி ஓடினான்! பாயும் புலிமுன் ஓடும் மனிதன் என்ன செய்யமுடியும்? ஒரே பாய்ச்சல், ஓங்கி ஒருஅறை. உயிர் உடலை விட்டுப் பிரிந்தது. வாடி வதங்கியிருந்த வேங்கை வலிமைக்கோர் உணவு கிடைத்ததென கொழுத்திருந்த ஆரியனின் உடலை ஆனந்தமுடன் வயிறார உண்டது.புலியாலும் மன்னனின் புதல்விமேல் காதல் கொண்டு புலியால் கொல்லப்பட்ட பூதேவனுக்கு "எப்பாவம் செய்தாலும் பிராமணன் உயர்ந்தவனே! அவனுக்கு மோட்சம்தான் கிடைக்கும்!" என்று கூறும் மனுதர்மப்படி மோட்சலோகம் கிடைக்கவில்லை, நரகம்தான் கிடைத்ததாம்!

"உங்களுக்குவேறுவேலை என்ன? பார்ப்பனர்களைத் திட்ட வேண்டுமென்றே கதை எழுதுகிறீர்கள்" என்று கேட்பர் மேலே கண்ட கதையைக் காண்போர். பார்ப்பனரை நாம் கேலி செய்யவில்லை, ஒரு நூல் கேலி செய்கிறது. அது ஒன்றும் ஆரிய எதிர்ப்பு நூலல்ல. ஆரியர்களுக்காகவே நாட்டில் மழை பெய்கிறது எனக்கூறும் நூல். அதுதான் மேலே கண்ட கதையை உருவாக்கும்படியான ஒரு பாட்டைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

"மதியிலா மறையோன் மன்னன்
மடந்தையைவேட்கை யாலே,

ருதுவது காலந்தன்னில் தோஷ
மென்றுரைத்தே யாற்றில்

புதுமைபா யெடுத்தபோது
பெட்டியில் புலி வாயாலே;

அதிருடன் கடியுண்டன்றே
யந்நரகடைந்தான் மாதோ."

இதுதான் அப்பாடல்:

நூலின் பெயர் "விவேக சிந்தாமணி." சாதாரண மறையோன் எனக் கூறவில்லை. "மதியிலா மறையோன்" எனக் கூறியிருக்கிறது. மதிகெட்டவனுக்கு மன்னன் மகள் வேண்டுமாம். பேதமையிலும் பேதமை. இப்படித்தான் மதி கெட்டுத் திரிகின்றனர் இன்றும் சில பார்ப்பனர்கள். தாங்கள் பேராசையால் செய்யும் ஒவ்வொரு காரியமும் தங்களுக்கே கேடாக வந்தடையும் என்று எண்ணாமல் இருக்கிறார்கள். பிறகு புலியின் வாய்ப்பட்ட மறையோன் கதைபோல்தான் அவர்கள் முடிவும் இருக்கும்.அதில்சந்தேகமே இல்லை!

—கூடலழகன்

சித்திரப்பாவை!

வட்ட நிலாச் சிட்டு வானவெளி வீதியிலே வலம் வந்துகொண்டிருந்தது. அந்த மேகக் கூட்டத்திற்குத்தான் என்ன மோகமோ. வாழ்நாள் முழுவதும் தன் வாழ்வை வளம்பெறச் செய்யத் தான் பெற்றிருக்கும் கணவனோடு கூட காதலி அவ்வளவு தழுவுதலைக் காட்டமாட்டாள். அதையும் மிஞ்சி அந்த மேகக் கூட்டம் வட்ட நிலாவைத் தழுவிக்கொண்டது. சிறிது நேரம் இருள். அப்படியே இன்னும் சிறிதுநேரம் அந்த இருள் நீடித்தது. பிறகு மோகத்திற்கு முடிவு கண்ட மேகக்கூட்டம் நிலாவை விட்டு விலகியதும் பால்வண்ண நிலவு எங்கும்பாவத் தொடங்கியது. அந்த நள்ளிரவிலும்கூட ஓரிரு உருவங்கள் நடமாடிக்கொண்டு இருந்தன.

முல்லை நாட்டு அரண்மனை, நிலாவின் ஒளிபட்டு, மின்னிக்கொண்டிருந்தது. மஞ்சத்திலே படுத்திருந்த மேகலை துயில்கொள்ளாது அப்படியும் இப்படியும் புரண்டு கொண்டே இருந்தாள். பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். பொறுக்க முடியவில்லை. ஏதோ நினைத்த வண்ணம் எழுந்து மேலாடையைச் சரி செய்துகொண்டு எங்கோ புறப்பட்டாள். எங்கே போகிறோம் என்று தெரியாமல் நடந்துகொண்டே இருந்தாள். திடீரென்று யாரோ மேகலை என்று கூப்பிடும் சப்தம்கேட்டு, சிலைபோல, அசைவற்று நின்றாள். அருகில் தோழி வருவதைக் கண்டு திகைத்துப்போனாள்.

“என்ன மேகலை இந்த இரவில் எங்கே புறப்பட்டுவிட்டாய்?” இது தோழியின் குரல் “என்னடி எங்காவது போகலாமென்று வந்தால் நீவேறு, தடை செய்கிறாய்! ஏன்! போனால் என்னவாம்?”—இது மேகலையின் குரல் “இல்லடி அம்மா இந்த இரவிலே நீ மட்டும் தனியே போகிறாயே நானும் வருகிறேன் என்றேன்.”

“சரி, சரி, வந்து தொலை.”

இருவரும் நடந்தார்கள். நடந்து கொண்டே இருந்த அவர்கள் ஏனோ கொஞ்சதூரம் சென்றதும் அப்படியே திகைத்து நின்றுவிட்டார்கள்.

‘ஏண்டி என்ன சப்தம் அது! அங்கே ஏதோ விளக்குத் தெரிகிறதே என்ன அது’ என்று சிறிது பயந்த தொனியிலேயே மேகலை தோழியைக் கேட்டாள்.

“தெரியவில்லையே, நானும் அதைத்தான் கேட்கிறேன். சரி வா போய்ப் பார்க்கலாம்” என்று தோழி கூறிவிட்டு, மேகலையின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு நடந்தாள்.

இருவரும் அந்த விளக்கை நெருங்கிக்கொண்டே இருந்தார்கள் அதை நெருங்க நெருங்க மேகலைக்குப் பயம் அதிகரித்தது. தோழி சிறிது தைரியமாகவே விளக்கை அடுத்திருந்த கூடாரத்திற்குச் சென்று அங்கே நடப்பதைக் ...வனித்தாள். அந்தக் கூடாரத் ...ளுள் யாரோ மூன்று ஆண்கள் ...க்கொண்டிருந்தார்கள். அவர் ... பார்க்கவே பயமாக இருந் ...ழிக்கு. அவள் மெள்ள ...யும் அந்த இடத்திற்குக் ...ன்று உள்ளே நடப்பதைக் காட்டினாள். மேகலை அவர்கள் பேசுவதை இலேசாகக் கேட்டதும் ஏதோ சுவை கண்டவள் போல் மிகவும் கவனமாய் உற்று உற்றுக் கேட்க ஆரம்பித்தாள். அந்த மூன்று பேர்களில் ஒருவன்,

“என்ன இளங்கோ! ஏன் யோசிக்கிறாய்? நான் சொன்னபடி நீ முதலில் கோட்டையின் வடபுறத்தை உன் படையைக் கொண்டு தாக்கு, பிறகு நான் கவனித்துக் கொள்கிறேன்” என்றான்.

மற்றொருவன், “என்ன இருந்தாலும் கோட்டையின் வடபுறத்தில் தானே முல்லை நாட்டான் முப்படையைத் தேக்கி வைத்திருக்கிறான். அப்பகுதியைத் தாக்குவது என்கிறபோது நீ போனால்தான் நமது வெற்றிக்கு கொஞ்சமாவது அடித்தளம் அமையும்” என்றான். இப்படியாக அவர்கள் பேசிக்கொண்டே இருந்தார்கள் அவர்கள்.பேச்சையே கேட்டுக்கொண்டிருந்த மேகலை “ஓ” என்று அலறி மயக்கம் போட்டு விழுந்துவிட்டாள். அந்தச் சப்தத்தைக் கேட்டுக் கூடாரத்திற்குள் இருந்தவர்கள் எல்லோரும் வெளியே ஓடிவந்து விட்டார்கள்.

தோழியின் உடலெல்லாம் வெடவெடத்துப் போய்விட்டது. ஒன்றும் புரியாமல் அவள் விழித்தாள் சிறிது நேரத்திற்குள் அந்த முகாமின் கூட்டமே அவளைச் சூழ்ந்துவிட்டது. ஆளுக்கொன்றாகப் பேச ஆரம்பித்தார்கள். ஒருவன் ஓடி அந்த முகாமின் தலைவன் குணாளனுக்குத் தகவல் தெரிவித்தான்.

அது செய்தி கேட்டதும் குணாளன் ஓடோடியும் வந்தான். ஓடிவந்த அவன், ஓய்வு பெறக்கூட எண்ணவில்லை. மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்கியது. அந்நிலையிலும் மேகலையின் அழகிலே மயங்கி நின்றுவிட்டான். மேகலை கூடாரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டாள். மேகலைக்கு மயக்கம் தெளிந்தது. கண் விழித்தாள்; எதிரே குணாளன் அமர்ந்திருப்பதையும் தோழி இல்லாததையும் கண்டு பயந்துவிட்டாள்.

மேகலையும் குணாளனும் ஒருவரையொருவர் உற்றுக்கவனித்தார்கள். கண்களோடுகண்கள் பேசிக்கொண்டன. குணாளன் மெய்மறந்து “கண்ணே” என்றான். உணர்வு பெற்றமேகலை, ‘சீ! யார் நீ? எட்டி நில்’ என்று கோபத்தோடு சொன்னாள்.

நான்....நான் என்று பதில் சொல்ல முடியாமலே திகைத்தான் குணாளன். இதற்குள் எங்கோ போயிருந்த தோழி‘மேகலைமேகலை’ என்று கூவிக்கொண்டே உள்ளே ஓடிவந்தாள். உள்ளே ஓடிவந்த அவள்,இருவரையும்கண்டு, திகைத்துப் போய்விட்டாள்! அவளை அறியாமலேயே அவள் வாய் ‘குணாளன’ என்றது.

குணாளன் என்றதைக் கேட்டதும் மேகலை அவனைக்கூர்ந்து கவனித்து பின் ‘குணாளா’ என்றாள்

‘ஆ...!மேகலா, என்று குணாளன் அவளைத் தழுவிக்கொண்டான். இருவர் கண்களிலும் கண்ணீர்த் துளிகள் வடிந்தன அதுவே திரையாகமாறியது. அதிலேயே பழைய நினைவுகள் படமாக ஓடின.

அன்று முல்லைநாடே ஒரு நிலையில் இல்லை. மக்களெல்லாம் அங்குமிங்கும்ஓடிக்கொண்டிருந்தார்கள். போர்முரசு கொட்டியது. படைகள் அணிவகுத்துக் கொண்டிருந்தன. முல்லைநாட்டு அரசர் பதைபதைத்துக்கொண்டிருந்தார். அவர்மனம் ஒரு சீராக இல்லை. அரண்மனையின் மேல்தளத்திற்குச் சென்று ஏதாவது சொல்வதும், மீண்டும் கீழே வந்து ஏதாவது சொல்வதுமாக இருந்தார். சேனாபதி குணாளன் அரசர் முன்வந்து நின்றான்.

“ம்...இன்னும்என்ன தாமதம்? எதிரியின் படைகள் நம்மை நெருங்கிக்கொண்டிருக்கின்றன. இன்னும் தாமதித்தால் நாம் பாழாக வேண்டியதுதான்! தயக்கம் வேண்டாம்! புறப்படும் சேனாபதியாரே” என்று கடுகடுத்த குரலில் கூறினார் அரசர்.

“இதோ புறப்பட்டு விட்டேன் மன்னவா” என்று கூறிப் போருக்குப் புறப்பட்டான் குணாளன்.

முல்லைநாட்டுப்படைகள் விரைந்து கொண்டிருந்தன. எதிரியின் படைகளும் ஆரவாரத்துடன் முல்லை நாட்டை நெருங்கிக்கொண்டிருந்தன. இரு படைகளும் சந்திக்க முல்லைநாட்டுப் போர்க்களம் இரத்தக்காடாக மாறியது.

கடைசியில் முல்லைநாட்டுப் படைகள் தோல்வியுற்றன. தோல்வியுற்ற செய்தியை எப்படித் தன் அரசருக்குத் தானேசென்று சொல்வது என்று புரியாமல் குணாளன் குழம்பினான். என்ன செய்வது? எப்படியும் மேகலையைப் பார்த்தாகவேண்டும்! இல்லையேல் தன்னால் வாழ முடியாது என்ற இக்கட்டான நிலையில் முல்லைநாடு திரும்பினான் குணாளன்.

அரசரிடம் நேரே சொல்லாமலேயே வேற்று நாட்டுக்குப் போய் விடுவதென்று முடிவுசெய்து நள்ளிரவில் மெள்ள மேகலையைப் பார்க்க அவளின் அந்தப்புரத்தை நெருங்கினான் குணாளன்.

யார் செய்த சதியோ என்னவோ அவன் அந்தப்புரத்தில் இருக்கும் போதே நான்கைந்து சேவகர்கள் அவனைப் பிடித்துக்கொண்டுபோய் அரசரிடம் நிறுத்திவிட்டார்கள். பாவம் தோல்வியுற்றதற்காகவோ அல்லது மேகலையைத் தனியே சந்தித்ததற்காகவோ எதற்கென்றே தெரியாமல் அன்றுஅவன்நாடுகடத்தப்பட்டான். அதே குணாளன்தான், அன்று பகைவனின் தலைவனாக வந்து, பிரிந்துசென்ற மேகலையைக் கண்டு பூரித்து நின்றான்.

அப்புறமென்ன! படையெடுப்பு படையெடுப்புத்தான்! அதன்பின் குணாளன் என்ன செய்தானோ என்னவோ! படை எப்படிப் போயிற்றோ தெரியவில்லை!

ஆனால் இன்று அந்தச் சித்திரப் பாவையும் அவனும் வாழ்கிறார்கள் இன்பமாக.

—விகரு. இராமநாதன்

பொய்யா மொழிகள்

ஒற்றுமை - எண்ணத்தில், செயலில், நோக்கில், குறிக்கோளில் யாவற்றிலும் ஒற்றுமை - இதுவே சமுதாயத்தின்முக்கியமான அம்சம். இதற்கு ஆணிவேர், இதயங்களின் ஐக்கியம்.

—இக்பால்.

வீரனுக்கு வெற்றி புகழையும் பெருமையையும்கொடுக்கிறது. எனினும் வெற்றி உணர்ச்சி எல்லை கடந்து போகும்போது வெறியாகவும் வஞ்சகமாகவும் மாறிவிடுகிறது.

—அறிவுத்திரள்.

வாழ்க்கையில் கவியும் கருமேகங்களுக்குக் காதல் ஒன்றுதான் வானவில்லாக இருக்கிறது. அதுதான் காலையிலும் மாலையிலும் ஒளி தருகின்றது. தொட்டிலில் துயிலும் குழந்தையின் பாசத்திற்கும் கல்லறையில் சமாதியான உயிருக்கும் அதுவே ஒளி தருகின்றது. கவிஞன், தத்துவஞானி, தேசபக்தன் எல்லோருக்கும் காதலே வழிகாட்டியாகவும் இருக்கிறது.

—இங்கர்சால்.

ஒரு அயோக்கியனை ஒளித்து மறைத்து வைக்கத்தக்க குகை எதுவும் உலகத்திலேயே இல்லை. அவன் ஒரு குற்றத்தைப் புரிந்தால், பூமியே ஒரு கண்ணாடிபோல அதை வெளிக்காட்டிவிடும்.

—எமர்சன்.

பெரிய இயக்கம் ஒவ்வொன்றையும் அதன் பகைவர் முதலிலேயே மதிக்கமாட்டார்கள். ஆரம்பத்தில் அவர்கள் அதனை அலட்சியஞ் செய்வர்; அடுத்தாற்போல் ஏளனம் செய்வர்;பின்னர் வசைமொழியால் பழிப்பர்; மேலும் அது வளருமானால் அடக்குமுறை என்னும் தண்டத்தைத் தொடங்குவர். இந்நான்கு படிகளையும் தாண்டிய பின்னரே ஓர் இயக்கம் வெற்றி என்னும் ஐந்தாம் படியில் ஏற முடியும்.

—காந்தியார்

அன்பு மட்டும் போதாது, அது அறியாமையை உண்டுபண்ணிவிடும். அறிவை மட்டும் வளர்த்தோமோ, மேனாட்டுக் கோரநிலை வந்துவிடும். அறிவு கலந்த அன்பில்தான் உலக நாகரிகம் தழைக்க முடியும்.

—ரஸ்ஸல்

எல்லா மனிதர்களையும் நம்பிவிடுவது ஆபத்து: ஒருவரையும் நம்பாமல் இருப்பது பேராபத்து.

—லிங்கன்

கற்பனையையும் பகுத்தறிவையும் ஒன்று சேர்த்து, இன்பத்தையும் உண்மையையும் காட்டுவதே கவிதை.

—ஜான்சன்

விவாதத்தின்போது மேற்கோள் காட்டுபவன் தன் ஞாபகசக்தியை உபயோகிக்கிறானே தவிர, தனது அறிவை உபயோகிப்பதில்லை.

—லியோனார்டோ டாவின்சி.

வியாபாரம் மவுசாக நடைபெற்றால், அதுவே விளம்பரத்திற்குப் பணம் தருகிறது. வியாபாரம் படுத்துப்போனால் விளம்பரம் செய்ய வேண்டியதாகிறது.

—யாரோ

தத்துவம்

நூல்கள், படிக்கவும், எழுதவும்

சோம்பேறிகளைப்போல படிப்பதில் பயனில்லை; உனது இதய இரத்தங்கொண்டு அனுபவ முத்திரையோடு எழுதவேண்டும். மனித அனுபவம், பழமொழிகளாகவும் சூத்திரங்களாகவும் நின்று நிலவும், அழியவே அழியாது. எழுத்தில் உறுதிவேண்டும், வாழ்க்கையின் ஒளியாக அமைய வேண்டும்; மலை மேல் மன உறுதியோடு ஏறிச் செல்வதுபோல இன்பச் சிலிர்ப்புடன் சிரித்துக்கொண்டே நூல்கள் எழுத வேண்டும். எதைக் கண்டும் அஞ்சலாகாது. நடந்து ஓடிப் பறப்பது போல நமது சிந்தனையும் நூலும் அமையவேண்டும். சொந்தக் கருத்தை, அஞ்சாமல் வெளியிடும் மனோதிடம் வேண்டும். உள்ளொளி பேனாவை ஊக்க வேண்டும். புலமையும் வெறியும் கலந்து நூல்களில் புகுந்து புரட்சி செய்யவேண்டும்.

வாழ்க்கையும் மரணமும்

வாழமுடியாதவர்கள், மனோதிடமில்லாதவர்கள் சாவது நலம். மரணத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்வதில் யாது பயன்? வாழ்க்கையின் நெருக்கடியை உணர்ந்து, தைரியமாக வாழவேண்டும்; கோழையாகச் சாவது கோமாளித்தனம்தான் அல்லவா?

போரும் போர் வீரர்களும்

உலகத்தில் குழப்பமும், நெருக்கடியும் வரும்போது, போரும் அவசியமாகிறது; போரிட்டே அமைதியை நிலைநாட்ட வேண்டியதிருக்கிறது. போருக்குப் பின்வாங்கினால், அமைதி அடியோடு அழிந்தே போய்விடும். போர் வீரர்களே, அமைதியை நோக்கிப் போரிடுங்கள்; போருக்குப்பின் சாந்தி நிலவும். வில்லேந்திய கையுடன், போர் வீரன் உலக அமைதியை உறுதி செய்கிறான்.

அரசாங்கம்

மனிதர்களை அடிமையாக்கி நசுக்கும் ஒரு கொடிய இயந்திரச் சூழ்ச்சி; மனித முன்னேற்றத்துக்கு ஒரு அபூர்வமான முட்டுக்கட்டைதான். நன்மைக்கும் தீமைக்கும் அப்பால் சிந்திக்கும் ஆற்றல்பெற்ற அரசியல் அமைப்பு இருந்தால், நல்ல பலன்கள் உண்டு.

கற்பு

பெண்களின் கற்பை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. இயற்கையின் எழில் அருமையாக மனத்தைப் பிடித்து இழுக்கும் போது, கற்பு நிலை மிகவும் கஷ்டம்தான். நிலையற்ற நிலைக்கு கற்பை நாம் சோதனை செய்ய நேரிடும்; இதைவிட, காதலர்கள் இயற்கையாக வாழ்வது நலம். தடையின்றித் தழுவி நிற்பது நலம். கற்பு நிலை வற்புறுத்தப்படுவதும் கஷ்டம்தான். ஆண்-பெண் ஆர்வ அலைகள்போல் கலந்து கஷ்டமின்றி வாழ்வது நலம். சங்கிலிபோட்டுக் கட்டுவதால் கற்பு நிலை பெறுதல்லவா? இயற்கையின் விசித்திர கோலங்களில், இதயங்களும் கண்களும் பேச ஆரம்பிக்கும்போது, சட்டம் இயற்கையின் வெறியையும் சேனையையும் தடுப்பதும்சரியல்லவே சட்டம் முனையில் முட்டிக்கொள்வதில் யாது பயன்? இயற்கையைச் செயற்கையால் சீரழிக்க முடியுமா?

நட்பு

நல்ல நண்பன் கிடைப்பது கஷ்டம்; புரியாமல் பழகிவிட்டு தான். ஆதலால், தனிமையில் இன்பம் காண்பாய். சுயநலம், பொது நலமாக மாறுவது எதிர்பார்க்க முடியாத மனித இயல்பு. உனது நண்பனுக்கு, நீ சுத்தமான காற்றையும் தனிமையையும் ரொட்டியையும் மருந்தையும் வழங்க முடியுமா?

பெண்கள்

குமரியுங் கிழவியும்! பெண்மையில், எந்தப் பகுதியும் புதிர்தான்; பெண்களைப்பற்றி ஆண்களிடம் பேசலாம்; ஆண்களைப்பற்றி பெண்களிடம் பேசலாம்; ஆனால் பெண்களைப்பற்றி பெண்களிடம் பேச வேண்டியது அவசியமா? மனிதன் பெண்களுக்கு ஒரு உபயோகமான கருவி, குழந்தை பெறும் வசதிக்கு மனிதன் ஒரு தூண்டுகோல். மனிதனுக்கு அபாயமும் இன்பமும் வேண்டும். அதனால்தான் பெண்ணை ஒரு அபாயகரமான விளையாட்டுப் பொம்மையாக விரும்புகிறான். சிருஷ்டியால் ஏற்பட்ட ஆணும் பெண்ணும் ஒரு புறமிருக்க, பெண்மை என்றால் பிரசவமே ஞாபகத்துக்கு வருகிறது. பிரசவமே ஒரு புதிர்தான், அபூர்வமான அதிசயமான புதிர். குழந்தைகளை நன்றாக அறிந்துகொள்ளும் சக்தி ஆண்களைவிட பெண்களுக்கே அதிகம் உண்டு. மனிதனிடமும்குழந்தையுள்ளம் உண்டு. அதைப் பெண்கள் நன்றாய் ஆழமாய் அறிந்துகொண்டு, மனிதக் குழந்தைகளுடன் பெண்கள் விளையாடுகிறார்கள். ஒவ்வொரு பெண்ணும் வயிரம் இழைத்த அதிசய பொம்மை காதலின் வெற்றியை, நல்ல திறமையுள்ள குழந்தைகளைப் பெறுவதில் காட்டவேண்டும்.

காதலில், வீரம் வேண்டும். பயமின்றி கம்பீரமாகக் காதலிக்க வேண்டும். மரியாதையின் தன்மையை பெண்கள் சுலபமாக அறிந்துகொள்ள மாட்டார்கள். ஆனால், காதல் துறையில், பெண்களைக் கண்டு ஆண்கள் முதலில் அஞ்சப்பட்டு அஞ்சவேண்டிய தாகவே இருக்கிறது. வாழ்க்கையின் பிற்பகுதியில், பெண்கள் எத்தனையோ தியாகங்களுக்கு உள்ளாகிறார்கள். காதலிக்கும் போதும், வெறுக்கும்போதும், பெண்களின் மனநிலையைக் கண்டு, ஆண்கள் அஞ்சாமலிருக்க முடியவில்லையே! மனிதனுடைய மிக ஆழ்ந்த உள்நிலை தீமைதான்; பெண்ணின் மனநிலை, தாழ்ந்த கேவலமான நிலைதான். அற்ப விஷயத்துக்கும் பெண்கள் வெறுப்பைத் தூண்டுவார்கள். காந்தக் கல்லைப் பார்த்து, இரும்பு சொல்வது: "நீ காந்தத்தால் என்னை இழுப்பதால் நான் உன்னை வெறுக்கிறேன்." பெண்களைப் பார்த்து ஆண்கள் இதையே சொல்லித் தீர வேண்டியதிருக்கிறது. எப்படியும் பெண்களின் சந்தோஷமும் ஆண்களைப் பொறுத்ததே. பெண்களே தனிப்பட்ட முறையில்; ஆண்களின் துணையின்றி வாழ்க்கையின் இன்பத்தையும் உண்மையையும் உணர முடியாது. ஆண்கள் சொற்படி பெண்கள் பணிந்து நடப்பது வாழ்க்கைக்கு நல்லது. இதில் காதலே பூரண வெற்றியடையும், உலகமே பூரண பக்குவமடையும்.

குழந்தையும் கண்ணாடியும்

கனவில் ஒரு குழந்தை தோன்றி கண்ணாடியை மௌனத்தில் ஆழ்ந்திருந்த ஞானியின்முன் காட்டியது. ஞானியின் புதிய பழுத்த அறிவு புயல்போலக்காட்சியளித்தது. ஞானி சிங்கம்போல் அமைதியாகக் கர்ஜனை செய்தது; மின்னல்களின் சிரிப்புகளுக்கு இடையே, அறிவு மழை பொழிந்தது. ஆம், இது ஞானக் கனி.

புலவர்கள்

ஆகா, புலவர்கள் போலிப் புலவர்கள், சிருஷ்டிக்கச் சக்தியற்ற புலவர்கள். பழைய குப்பையைக் கிண்டி வாந்தியெடுக்கும் புலவர்கள் தானே! புதிய உண்மைகளை தரிசிக்கச் சக்தியற்ற அறிவிலிகள், பழைய துருப்பிடித்த நூல்களைத் தூக்கிச் சுமந்து கொண்டு, திண்டாடுகிறார்கள்.—ஆம்! நானே, புதிய சிருஷ்டியில் ஈடுபட்டிருப்பதால், அவர்கள் என்னுடைய மேதையைக் கண்டு அஞ்சி வெறுக்கிறார்கள். போலிப் புலவர்களின் ஆஷாட பூதித்தனம், நாசமாய்ப் போவது நலம். போலிப் புலவர்கள், இலக்கிய இயந்திரங்கள், மணி காட்டும் பழைய கடிகாரங்கள்.

பிறர் புதிய உண்மைகளைப்பற்றிச் சிந்திக்கவே கூடாது என்று, கட்சி கட்டிக்கொண்டு கடிக்கவரும் விஷ ஜந்துக்கள்தான், போலிப் புலவர்கள்: போலிப் புலமை, விஷமாகவே மாறிவிடுகிறது. சிருஷ்டிக்க சக்தியற்றவர்கள், ஏன் புலவர்கள் என்று ஆடம்பரம் செய்யவேண்டும்?

கவிஞர்கள்

என்றும் நிலைத்து நிற்பது உண்மைக் கவிதை. இயற்கையின் விசித்திர எழிலில் சிக்குண்ட கவிஞர்கள், மதிமயங்கிப் பாடுகிறார்கள். நல்ல கவிதை எழுதுவது கஷ்டம்தானே. சிறந்த உண்மைகளும் கூர்மையான பாஷையும் வேண்டுமல்லவா? கடலே, எழில் நிறைந்த கனவோடு மயில்போல ஆடி அலைகிறது; கவிஞன், இதைக் கண்டு மதிமயங்கிப் படிக் கதறுகிறான். இயற்கை, கவிஞன் இதயத்தில் இறுகப் பாய்ந்து இன்பநாதமாகப் பெருக்கெடுத்தோடுகிறது. போலிக்கவிஞர்களின் பாட்டோ, வறண்ட உணர்ச்சியற்ற குப்பைதான்.

ஆர்வம்

தனிமையில், மலை உச்சியில் சிந்தனையின் ஆழத்தில், ஆர்வம் அபூர்வமாக வளரும்; பூர்ணபக்குவமடைந்து, செயலில் பக்குவமாய் வெற்றிபெறும். ஆவேசம், ஆர்வமாக வளர்ந்து உண்மையைத் தரிசிக்கும்,

சோகக் கீதம்

உலக சிருஷ்டியால், எங்கும் சோக கீதம்தான்; சிருஷ்டியின் வில்லங்க அமைப்பில், கவிஞனும் கறியே தீர்க்கவேண்டும்; பாம்பையும் கழுதையையும் கண்டகவிஞன், சோககீதம் தானே பாடமுடியும்! சொற்கள், தண்ணீர்த் திவலைகளாகவே புலம்பி இசைக்கின்றன. துன்பநாதம் உலகத்தைச் சுற்றி ஓலமிடுகிறதல்லவா?

மௌனம்

வாழ்க்கை இயந்திரம் உயிர்க்கடிகாரம், மௌனமாகவே மணியடிக்க ஆரம்பிக்கிறது. மலை நடுவே, மௌனம் பழுத்து, பேருண்மைகளைக் கண்டு சிரிக்கவே ஆரம்பித்துவிடும்! தனிமையால் இனிமை, இனிமையால் அகண்ட ஒளி வெள்ளம்; கனவு தாண்டிய மௌனம், சுடரோவியம்தான்.

விழிப்பு

கனவிலின்று விழிப்புற்ற மனநிலை அதிசயமான நிலைதான், அபூர்வமான நிலைதான். மிகமிக உயர்ந்தது, நிகரற்றது; இனிமை ததும்பி நிற்கும் விழிப்பு நிலை, அகண்ட சக்தி வாய்ந்தது.

ஆடலும் பாடலும்

பெண்கள் ஆடுகிறார்கள், பாடுகிறார்கள்... அவர்கள் ஆடப்பிறந்தவர்கள், பாடப்பிறந்தவர்கள். அவர்கள் உடலிலும் குரலிலும், இனிமையும் எழிலும் விரிந்து பரவி உள்ளத்தை இழுக்கும்காம்லகரியாகவே சுழன்று சுழன்று மனிதனின் கனிந்த உள்ளத்தையே விரைவில் முற்றுகையிடுகிறது. அழகைக் கண்ட மனிதன் சிரிக்கிறான். உருகுகிறான். பின்னால் அழவும் நேரிடுகிறது ஏன், இதுவே வாழ்க்கையின் விபரீதம்!

வி. ஆர். எம். செட்டியார் பி. ஏ.
[இலக்கிய விருந்து]

தமிழகம்

புத்தக விற்பனை நூல் நிலையம்

40, பிட்டர்ஸ் ரோடு-ராயப்பேட்டை, சென்னை.

எங்களிடம் அருணோதயம் வெளியீடுகளும் மற்றும் தமிழ் நாட்டிலுள்ள அத்தனை பதிப்பக வெளியீடுகளும் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். உடனே தொடர்புகொள்க.

அருணன்.

வெண்பாப் போட்டி

வெண்பாப் போட்டி 7

ஈற்றடி: பூவைமே லெத்தனைப் பூ!

குறிப்பு: நேரிசை வெண்பாக்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

முடிவு தேதி 23-4-55

நீதிபதி 'சகி' தென்றல் : : செ

ஆயிரம்தீவு அங்கயற்கண்ணி

அரிசங்கமன் மீண்டும் வெளியே வந்தான். வண்டியில் ஏறிக் கொண்டான். நேராக சித்தினி வீட்டிற்கு வண்டியைச் செலுத்தச் சொன்னான். அவன் முகம் கோபத்தால் கொதிப்பேறி இருந்தது. மரகதம் காணமற்போன செய்தி இடைதுறையானுக்குத் தெரிந்தால் ...! அவன் முன்பே மரகதத்தின் மீது சந்தேகம் கொண்டிருந்தான். இப்போது, இச்செய்தியும் அவன் காதில் விழுந்தால், அரிசங்கமனுக்குத்தான் அபாயம்.

மரகதம், இடைதுறையானுக்கு எதிராகச் சதிசெய்வதாகக் கருதப்படுவாள். முடிவு அரிசங்கமனுக்கும் சிறைத் தண்டனைதான் கிட்டும். நீண்ட நாட்களாக இடைதுறையானுடன் கூடி சதி செய்து வந்தான் அரிசங்கமன். சதி நிறைவேறினால் முக்கியமான பதவி ஒன்று அவனுக்குக் கிட்டும் என்று நம்பியிருந்தான். இதனால் வரும் நன்மை தீமைகளைக் கணக்கிட்டே சதி வேலையில் துணிந்தான். உயிரைத் துச்சமாகக் கருதினான்.

அவன் நினைத்தபடி சதியும் நிறைவேறியது. அதற்குப் பலன் கிட்டும் நாள் இன்றுதான். பழம் நழுவிப் பாலில் விழும் நேரம். ஆனால் திடீரென்று மரகதம் காணப்படவில்லை. இனி என்ன செய்வது ? இடைதுறையானின் சந்தேகத்தை எப்படிப் போக்குவது ? இதை நினைக்கும் போதுதான் அவனுக்கு ஆத்திரமாக வந்தது.

வண்டி சித்தினி வீட்டின் வாசலில் நின்றது. அரிசங்கமன் வண்டியிலிருந்தபடியே ''சித்தினி'' என்று அலறினான். இரு முறை அழைத்த பிறகு சித்தினி வெளியே வந்து எட்டிப் பார்த்தாள். அரிசங்கமன் வண்டியில் ஆத்திரத்துடன் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். அவள் உடல் நடுங்கியது. '' இங்கே வா !'' என்று அதட்டினான் அரிசங்கமன். அடிமேல் அடிவைத்து நடந்து வந்தாள் சித்தினி.

''மரகதம் எங்கே ?'' என்று அதட்டிக் கேட்டான். சித்தினிக்குப் பயத்தால் தொண்டை அடைத்துக் கொண்டது.

"அவள் ... அவள் ... மரதகம்'' என்று குழறினாள். அரிசங்கமனுக்கு இன்னும் ஆத்திரம்தான் வந்தது. சொல்லுகிறாயா இல்லை ? என்று குதிரைச் சாட்டையை ஓங்கினான்.

"சொல்கிறேன் ! சொல்கிறேன் ! அவள் நேற்றுஇரவு ஒருஒற்றனுடன் ஓடிப்போய் விட்டாள் ! ''

"ஒற்றனா ? யாரவன் ?''

"தெரியாது ! தெற்குப் பகுதிக் காவல் படையில் ஒற்றனாகப் பணி [illegible]ரிந்தவனாம். நேற்று இரவு [illegible]ன் வழியாகத் தான் சென்றார் [illegible] 'எங்கே போகிறீர்கள் ?' [illegible] மரகதத்தைக் கேட்டேன். [illegible] நண்பர். என் தோழி [illegible] காட்டுவதாகச் சொல்கிறார். அங்கே செல்கிறேன்' என்றாள். ''இவர் யார் ? '' என்று கேட்டேன். அதற்குத்தான் அந்தப் பதிலைச் சொல்லிவிட்டு வேகமாகச் சென்றுவிட்டார்கள் '' என்றாள் சித்தினி. இன்னும் அவளுடைய உடல் நடுங்கிக் கொண்டுதானிருந்தது.

"நான் திரும்பி வரும் வரை நீ வீட்டிலேயே இருக்க வேண்டும்'' என்றுசொல்லிவிட்டு தெற்குப்பகுதி காவற்படை வீட்டிற்குச் சென்றான். அங்கே வீரர்கள் பயிற்சி செய்து கொண்டிருந்தனர். அரிசங்கமனைக் கண்டதும் அனைவரும் வணக்கம் செய்து வழி விட்டு நின்றனர். தெற்குப் பகுதிப் படைத் தலைவன் அரிசங்கமனை அணுகினான்.

''உமது படை வீரரில் யாராவது நேற்று முதல் காணமற் போய் விட்டார்களா ? '' என்று கேட்டான் அரிசங்கமன். "ஆமாம் ! நேற்று இரவு முதல் ஒருவனைக் காணவில்லை. ஆனால் அவன் வேவு பார்க்கத்தான் சென்றிருப்பான் '' என்றான் படைத்தலைவன்.

"யாரவன் ? '' என்று கேட்டான் அரிசங்கமன்.

"ஒரு வாரத்திற்கு முன்பு இங்கே வந்தான். சில வேவு விவரங்களைக் கூறினான். அவ்வளவும் நமக்கு வேண்டிய விவரங்கள். உடனே நகரக்காவல் படைத்தலைவர் அவனை நமது படையில் ஒருவராகச் சேர்த்துக்கொள்ளச் சொன்னார். ஒரு வாரமாகப் பல செய்திகளைச் சேகரித்து வந்தான். கலவரமின்றி மன்னர் கைது செய்யப்பட்டதையும், இடைதுறைமன்னர் ஆட்சி ஏற்றதையும், அந்த ஒற்றன் தான் முதலில் வந்து தெரிவித்தான். வேவு வேலையில் மிகவும் கெட்டிக்காரன். துணிச்சல் பேர்வழி'' என்றான் படைத்தலைவன்.

அரிசங்கமன் படைத்தலைவனைத் தனியாக அழைத்துச் சென்று, இரகசியமாக ஏதோ சொன்னான். ''அப்படியா ? '' என்று கொதித்தெழுந்தான் படைத்தலைவன். அரிசங்கமன் தலையை ஆட்டினான். உடனே படைத்தலைவனும், இன்னும் எழுவரும், குதிரைகளின் மீது ஏறினர். திக்குக்கு இரு வீரர்கள் வீதம் நாலா பக்கமும் பறந்தனர்.

5

'சேவக னேநீ செப்பிய தென்னை ?'

மண்ணரசும் மனையரசும் மற்றையஃ றெழிலரசும்
பெண்ணரசு மாணரசும் பிரியாத பேரரசாய்
நண்ணரசு புரிந்தொருங்கு நல்லரச ராய்வாழ்ந்த
பண்ணரசர் வளர்த்தவிசைப் பாவரசத் தமிழரசர்

—இராவண காவியம்

மனித சஞ்சாரமற்ற அந்தத் தீவிலே, அழகான மாளிகையும், அதற்குள் அழகிகள் மூவரும் இருப்பது இராசராசனுக்கு வியப்பையளித்தது. தளநாயகனும், மற்ற படைவீரர்களும் கூட வியப்பில் ஆழ்ந்தனர்.

''யார் நீங்கள் ? '' என்று கேட்டான் தளநாயகன்.

'இங்கே வேறு யாருமில்லையா ?' என்று கேட்டான் இராசராசன்.

அந்த மூன்று பெண்களில் சிறியவள் - சிறந்த அழகி, தலையை உள்ளே இழுத்துக் கொண்டாள். மற்றொருத்தி கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள். ஒருத்திதான் பேசினாள்.

''இப்போது எங்களைத் தவிர வேறு யாருமில்லை ''.

'' இந்தத் தீவிலேயே யாருமில்லையா ? ''

''இருப்பார்கள், ஆனால் இந்த மாளிகையில் நாங்கள் மூவர்தான் இருக்கிறோம். ''

'நாங்கள் உள்ளே வரலாமா ?' என்று தளநாயகன் கேட்டான்.

''நீங்கள் யார் ? எங்கிருந்து வருகிறீர்கள் ? '' என்று கேட்டாள் அந்தப் பெண்.

"நாங்கள் சோழநாட்டைச் சேர்ந்தவர்கள். கடல் பிரயாணத்தில் கப்பல் கரை தட்டியதால், இங்கு இறங்க நேர்ந்தது'' என்றான் தளநாயகன். அப்போது தலையை உள்ளே இழுத்துக் கொண்ட இளம் பெண், மீண்டும் எட்டிப் பார்த்தாள். அவளுடைய கண்கள் அகல விரிந்தன. எல்லோரையும் பார்த்துவிட்டு, இராசராசன் மீது பதிந்து நின்று விட்டது அந்தப் பார்வை. முதலில் பார்த்ததும் மறைந்துவிட்ட அந்த எழில் முகம், மீண்டும் அந்தப் பலகணியில் உதயமாகாதா என்று ஏங்கி நின்ற இராசராசன், அந்தப் பார்வையில் தன்னை மறந்து நின்றான்.

'திசை தப்பி வந்தவர்கள் யாராயிருந்தாலும்வரவேற்கவேண்டியது தான் கடமை. உள்ளேவாருங்கள்'' என்றாள் அந்தப்பெண். படை வீரர்கள் வெளியில் தங்கியிருக்க. இளவரசனும் தளநாயகனும் உள்ளே சென்றனர்.

இளையவள் தவிர, மற்ற இரு பெண்களும் அங்கு வந்தனர். தளநாயகனையும் இளவரசனையும் வரவேற்றனர். ஆசனங்களில் அமரச் சொன்னார்கள். புன் சிரிப்புத் தவழ தளநாயகன் பேச்சை ஆரம்பித்தான்.

''நீங்கள் யார் ? இங்கு ஏன் தன்னந்தனியாக வந்திருக்கிறீர்கள் ? உங்கள் ஆதரவாளர்கள் யார்? இந்த மாளிகை யாருடையது? அவர்கள் எங்கே ? இந்தத் தீவுக்குப் பெயர் என்ன ? இது யாருடைய ஆட்சியில் உள்ளது?'' என்று கேட்டான் தளநாயகன்.

அந்தப் பெண்களில் பெரியவள் கூறினாள்:- ''நாங்கள் இடைதுறை நாட்டைச் சேர்ந்தவர்கள். ஒரு பாவமும் அறியாதவர்கள். ஆனால், எங்கள் பெற்றோர் செய்த தவறுக்காக நாங்கள் பழிவாங்கப்படுகிறோம். இந்தத் தீவிலே நாங்கள சிறை வைக்கப் பட்டிருக்கிறோம்'' அப்போது மூன்றாவது பெண்ணும் தயங்கித் தயங்கி அங்கு வந்து சேர்ந்தாள்.

அவளைப்பார்த்தான் இராசராசன். அவளுடைய கண்கள் கண்ணீரைக் கக்கின - இங்கே ஒரு இரகசிய சோக சித்திரம் மறைந்திருக்கிறது. அதை அறிய வேண்டும் என்ற ஆவல் இராசராசனுக்கு எழுந்தது.

'' என் கப்பல் கரைதட்டியதும் நன்மைக்குத்தான் என்று எண்ணுகிறேன். சொல்லுங்கள் உங்கள் கதையை. சோழவள நாட்டான் இந்தச் சுந்தர முகத்தின் சோகம் துடைப்பான் ! ' என்றான் இளவரசன். அந்த அழகியின் கண்கள் நன்றியுடன் அவனைப் பார்த்துக் கவிழ்ந்தன.

''இந்தப் பெண் பெயர் இன்பவல்லி. இடைதுறை நாட்டின் அரச குடும்பத்தைச் சார்ந்தவள். நாங்களிருவரும் அவளுக்குத் தோழிகள். சுமார் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சையிலிருந்து ஒரு பெண்ணைத் தூக்கி வந்தனர் இடைதுறை நாட்டு வீரர்கள். இது எங்களுக்குத் தெரியாது. ஏனெனில், அப்போது நாங்கள் சிறுமிகளாய் இருந்தோம். இன்பவல்லி இந்த மண்ணில் தோன்றவுமில்லை. தூக்கிவந்த அந்தப் பெண்ணை, இன்பவல்லியின் பெற்றோர் தங்கள் மாளிகையில் சிறை வைக்கச் சம்மதித்தனராம். பின்னால் அந்தப்பெண் தப்பிச்சென்று விட்டாள். பெரும் படை சேர்த்தாள். இப்பகுதியிலுள்ள பலதீவுகளை தன் வசப்படுத்திக் கொண்டாள். அதிலே இந்தத்தீவும் ஒன்று. இதற்குப் பவளத்தீவு என்று பெயர்.

''தன்னைக்கெடுத்து, தன் வாழ்வைச் சிதைத்து, தன் குடும்பத்திலிருந்து தன்னைப் பிரித்த வீரர்களைப் பழிவாங்கத் துடித்தாள் அந்தப் பெண். தன்னை சிறைவைக்கச் சம்மதித்த இன்பவல்லியின் குடும்பத்தையும் பழிவாங்க முடிவு செய்தாள். அந்த அக்ரமங்களுக்கு இடமளித்த இடைதுறை நாட்டையே பழிவாங்கச் சபதம் எடுத்தாள். பெரிய ஒற்றர் படை யொன்று சேகரித்தாள். ஒரு பெண்ணின் தலை

மையில் அப்படையை சோழ நாட்டிற்கு வடக்கே அனுப்பி வைத்தாள். இடைதுறை நாட்டிலிருந்து பல இரகசியங்களைச் சேகரித்தாள்.

"அவளுடைய எண்ணங்கள் பலனை கூடின. இச்சமயத்தில் தான், ஒரு நாள் நாங்களிருவரும் இன்பவல்லியுடன் மாளிகையில் விளையாடிக் கொண்டிருந்தோம். இரு காவலர்களைத் தவிர அந்த நேரத்தில் வேறு யாருமில்லை அந்த மாளிகையில்.

"திடீரென பத்துக்குதிரை வீரர்கள் அங்கே வந்தனர். இரு காவலர்களின் தலைகளையும் பனங்காய் போல் சீவி எறிந்தனர். மாளிகைக்குள் நுழைந்தனர். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. கூச்சலிட்டோம். கத்தினோம். பிறகு நடந்தது எங்களுக்கே தெரியாது. மயக்க முற்று விழுந்த எங்களை ஆலங்காடு என்ற பகுதியில் கொண்டு வந்து சேர்த்தனர். அங்கிருந்து பல்லக்கு மூலம் கடற் கரைக்குக் கொண்டு சென்றனர். அங்கிருந்து படகு ஏறி சாந்திமத் தீவிற்குச் சென்றோம். தீவை அடைந்து ஒரு மாளிகைக்குச் சென்றதும் "அன்னை வாழ்க!" என்ற கூட்டுக் குரல் எங்கும் ஒலித்தது.

"எங்களை அங்கேயே நிறுத்தி விட்டு, படைத் தலைவன் உள்ளே சென்றான். பிறகு திரும்பி வந்து எங்களை அழைத்துக் கொண்டு இங்கே வந்தான். நாங்கள் வரும் போது இந்த மாளிகையில் ஒருவருமில்லை. இந்தமாளிகையைச் சுத்தம் செய்து, இரு படை வீரர்களை எங்களுக்காக நிறுத்திவிட்டுச் சென்றனர் மற்ற வீரர்கள். வாரத்திற்கொருமுறை, எங்களுக்குத் தேவையான உணவு, மற்ற பொருள்களை ஏற்றிக் கொண்டு ஒரு படகு வரும். நான்கு வீரர்களும் உடன் வருவார்கள். எங்களின் நலன் விசாரித்துச் செல்வார்கள். தோணியைச் செலுத்துபவர்களிடமும், இங்கு வரும் வீரர்களிடமும் கொஞ்சம் கொஞ்சமாக இந்தச் செய்திகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டோம். அன்று முதல் இன்று வரை தன்னந்தனியாக இங்கு சிறை வாசம் செய்கிறோம். எங்கள் வாழ்வு மலரும் நாள்-எங்கள் சிறைவாசம் நீங்கும் நாள் - எப்பொழுதோ அறியோம்?" இவ்வாறு சொல்லி முடித்தாள் அந்தப் பெண்.

இடையிடையே இன்பவல்லி இளவரசனைப் பார்த்தாள். இளவரசனும் இன்பவல்லியைப் பார்த்தான். இருவர் கண்களும் சந்தித்துப் பேசின. இருவர் உள்ளங்களும் இரகசியம் பேசின. தளநாயகன் இதில் கவனம் செலுத்தவில்லை. இடைதுறை நாட்டுக்குப் போருக்குச் சென்ற நினைவு அவனுக்கு எழுந்தது. வழியில் ஆலங்காட்டில் தங்கியதும், சில பெண்களையும் வீரர்களையும் சந்தித்ததும், அவனுக்கு ஞாபகம் வந்தது.

நந்தினியைப் பற்றிய நினைவும் உடனே எழுந்தது. அவளுடைய தாயைப் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் சிலர் கவர்ந்து சென்றதை அவன் அறிவான். அந்தப் பெண் தான் அன்னையாக இருப்பாளோ? அப்படியானால் நந்தினி ஏன் காணாமற் போனாள்? ஒரு வேளை அன்னையே நந்தினியை அழைத்துச் சென்றிருந்தால்? இவ்வாறு பலவாறாகச் சிந்தித்தான் தளநாயகன். இரகசியமெல்லாம் சீக்கிரம் வெளியாகி விடுமென்ற நம்பிக்கை அவனுக்குப் பிறந்தது. நந்தினியைச் சந்திக்கப் போகும் நாள் தூரத்திலில்லை என்பதை உணர்ந்தான்.

"அந்த வீரர்கள் எப்போது வந்து சென்றார்கள்? இனி எப்போது வருவார்கள்?" என்று கேட்டான் தளநாயகன். "நேற்று முன் தினம் தான் வந்து சென்றார்கள். இன்னும் நாலைந்து தினங்களில் வருவார்கள்" என்று பதிலளித்தாள் அந்தப் பெண்.

"அதுவரை நாமும் இங்கே தங்கிச் செல்வோம்" என்றான் தளநாயகன். இளவரசனுக்கு இச்செய்தி இனிப்பாக இருந்தது. இன்பவல்லியின் உள்ளம் இதைக் கேட்டுக் கூத்தாடியது. "சரி" என்று தலையை ஆட்டினான் இளவரசன். இளவரசன் கண்களும், இன்பவல்லியின் கண்களும் மீண்டும் ஒரு முறை சந்தித்து ரகசியம் பேசின.

படை வீரர்கள் மாளிகைக்குப் பக்கத்தில் கூடாரம் அமைத்துத் தங்கினார். இளவரசனும் தளநாயகனும் மாளிகையிலேயே தங்கினர். வேறு யாராவது பவளத் தீவிற்கு வரலாம் என்ற எண்ணத்திலும், நந்தினியைப் பற்றித் தனியாகச் சிந்திக்கலாம் என்ற ஆவலினும், தளநாயகன் காலையில் வெளியே செல்வான். மாலையில் திரும்புவான். இரவிலும் தனியாக உலவுவான். இளவரசனுக்கு இன்பவல்லியைத் தனியாகச் சந்திக்க ஆசை. தளநாயகன் அவனைத் தனியே விட்டுச் செல்வது இளவரசனுடைய ஆசை நிறைவேற வழிவகுத்தது. இன்பவல்லியும் இளவரசனும் அடிக்கடி சந்தித்தனர். பேசினர். சிரித்தனர். இரண்டு நாட்களுக்குப் பின் இருவரும் கடற்கரையில் பட கோட்டி விளையாடினார்கள்.

தளநாயகன் இதை அறிந்தான். சோழ நாட்டின் எதிரிகள் தான் இந்தப் பெண்கள் என்பதை இருவரும் அறிவார்கள். அறிந்தும், இன்பவல்லியுடன் இளவரசன் பேசுவதும், இருவரும் தனியாகத் தீவைச் சுற்றுவதும் அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆயினும், இன்னும் இரண்டொரு நாட்களே அத்தீவில் தங்கப்போவதால் இளவரசனைக் கண்டிக்க அவன் விரும்பவில்லை.

மூன்றாம் நாள் காலை. தளநாயகன் வழக்கம் போல் வெளியே சென்றான். முதலில் தனது கப்பல் நிற்குமிடம் செல்வான். பிறகு தான் மற்ற இடங்களுக்குச் செல்வான். அன்றும், முதலில் தோணியில் சென்று கப்பலை அடைந்தான். கப்பலைச்செலுத்தும் மாலுமியைச் சந்தித்தான்.

"இன்று அதிகாலையில் ஒரு இளைஞனும், ஒரு பெண்ணும் நமது கப்பலுக்குச் சமீபமாக ஒரு தோணியில் சென்றனர். கொஞ்சம் விலகிச் சென்றதால் நான் அவர்களை அடையாளம் தெரிந்து கொள்ள முடியவில்லை. சிறிது நேரம் இங்கேயே நின்று அவர்களைக் கவனித்தேன். தோணி பவளத் தீவை நோக்கிச் சென்றது. கரை சேர்ந்ததும். இருவரும் கரையில் இறங்கித் தீவுக்குள் சென்று மறைந்து விட்டனர்," என்றான் மாலுமி.

தளநாயகனுக்கு இச்செய்தி வியப்பையளித்தது. மீண்டும் கரை வந்து சேர்ந்தான். நேராக மாளிகையை அடைந்தான். அங்கே இளவரசனைக் காணவில்லை. இன்பவல்லியும் இளவரசனும் அப்போது தான் வெளியில் செல்வதாகத் தோழி கூறினாள். அவர்களைத் தேடிக் கொண்டு தளநாயகன் தீவின் உட்புறம் சென்றான்.

அழகிய சோலை ஒன்றைக் கண்டான் தளநாயகன். அதற்குள் புகுந்து செல்லலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தான். அதேசமயம் சிரிப்பொலி கேட்டது. துணிந்து உள்ளே நுழைந்தான் தளநாயகன். இளவரசனும் இன்பவல்லியும் அங்கிருந்த ஒரு தடாகத்தின் கரையில் அமர்ந்து பேசிச் சிரித்துக் கொண்டிருந்தனர். அதைப் பார்க்கும் பொழுது தளநாயகனுக்கு எரிச்சலாகத்தானிருந்தது. வேலையை மறந்து, கடமையை மறந்து, வந்த வழியில், பார்த்த பெண்ணுடன் அதுவும் எதிரி நாட்டைச் சேர்ந்தவள் என்று தெரிந்தும் அவளுடன் கூடிக்குலாவுவதை வெறுத்தான்.

அதே சமயம் ஒரு வீரனும் ஒரு பெண்ணும் அவர்களுக்குப் பின்பக்கமாக வந்தனர். "அங்கே வீடு பற்றி எரிகிறது. இங்கே சுருட்டுப் பற்றவைக்க நெருப்புத் தேடுகிறார்கள்!" என்றான் அந்த வீரன். இளவரசனும் இன்பவல்லியும் திகைத்துத் திரும்பினர். இருவருக்கும் அறிமுகம் இல்லாதவர்கள் அங்குவந்த வேறு இருவரும் தங்களைக் கேலி செய்தது இளவரசனுக்குக் கோபத்தை யூட்டியது.

"யார் நீங்கள்?" என்று கேட்டவாறு எழுந்து வாளை யுருவினான் இராசராசன். வந்தவர்கள் இருவரும் புன்னகை தவழ நின்று கொண்டிருந்தனர். மறைந்து நின்ற தளநாயகனும் அவர்கள் பேச்சைக் கேட்டான். கப்பல் மாலுமி சொன்ன ஆட்களாயிருக்குமோ என்று சந்தேகப் பட்டான். நின்ற இடத்திலிருந்து வெளியில் வந்து எட்டிப் பார்த்தான். அவன் கண்களை அவனாலேயே நம்ப முடியவில்லை. தான் காண்பது கனவோ என்ற சந்தேகம் வேறு.

அவனுக்கு அவ்வளவு வியப்பையளித்தது எது? வந்தவர்களில் மரகதமும் இருப்பதுதான். கப்பல் கரை தட்டி, திக்குத் தெரியாத இந்தத் தீவிற்கு வந்தாலும், இங்கு கூட மரகதம்வந்திருக்கிறாளே? அவ்

ளுடன்கூடவந்திருக்கும் அந்தவீரன் யார்? இவ்வாறு வியப்புடன் சிந்தனையை ஓட விட்டான் தளநாயகன்.

இளவரசனோ மரகதத்தின் புன்முறுவலைப் பொறுக்கமாட்டாதவனாய் வாளை வீசிக்கொண்டே அவரை நெருங்கினான். மரகதத்திற்குப் பக்கத்தில் நின்ற வீரன் புன்னகையை மறந்து பேய்ச்சிரிப்புச் சிரித்தான். இடையில், உறையில் உறங்கிக் கிடந்த வாளை உருவினான். விபரீதம் நிகழப் போவதையறிந்த தளநாயகன் "இளவரசே!" என்று கத்தினான்.

நால்வரும் தளநாயகனைத் திரும்பிப் பார்த்தனர். மரகதம் தளநாயகனைக் கண்டு முதலில் ஆச்சரியப்பட்டாள். பிறகு தலை குனிந்து வணங்கினாள். இளவரசனுக்கு விபரம் ஒன்றும் புரியவில்லை.

"வீரரே! சோழ நாட்டின் மன்னர் இந்த இளவரசரின் தந்தை, இராசேந்திர சோழர் கைது செய்யப்பட்டு விட்டார். இடைதுறை மன்னர் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார். சோழநாட்டில் ஒரே குழப்பம் என்றாள் மரகதம்.

தளநாயகனும் இளவரசனும் ஒரே சமயத்தில் 'ஆ' என்று கத்திவிட்டனர். இன்பவல்லி மட்டும் வியப்பும் திகைப்பும் மேலிட எல்லோரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தொடரும்

பேராசிரியர் விழா!

◉ கொப்பனும்பட்டி கலைமகள் கல்லூரியில், 3-4-55 மாலை 6 மணிக்கு மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரித் தலைவர் திரு. புலவர் மு. கோவிந்தசாமி பி. ஓ. எல். (ஆனர்ஸ்) அவர்கள் தலைமையில் நடைபெறும். அவ்வமயம் வித்துவான் திரு. கு. மா. நாராயணசாமி பிள்ளை, வித்துவான் திரு. ஆர். சோமசுந்தரம் முதலியோர் சொற்பொழிவாற்றுவர்.

◉ நெல்லை இளைஞர் கூட்டுறவுக் கழகத்தின் (The Nellai Young Men Association) சார்பாக சுந்தரனார் விழா 10-4-55 அன்று நடைபெறும் என்று சேது. கண்ணன் தெரிவிக்கிறார்.

◉ ராசிபுரத்தில் 14-4-55 அன்று சுந்தரனார் நினைவு விழா சிறப்பாகக் கொண்டாடப்படும் என்று டி. பத்மநாபன் தெரிவிக்கிறார்.

◉ முருகன் குடியில் சுந் ...னார் விழா சிறப்பாகக் ...ண்டாட இருக்கிறார்கள் ... முருகன்குடி பாட ...லைமையாசிரியர் திரு. ...ாள் தெரிவிக்கிறார்.

பாதி பாதி!

......பெரிய சிலம்புச் செல்வராம் இவர்! ம. பொ. சி.யாம் ம. பொ. சி! பிரமாதமாகப் பீத்திக்கொள்ளுகிறார். தமிழரசு வாங்கப்போகிறாராம் தமிழரசு! பைத்தியக்காரர். இவர் வாங்கி விடுவாரோ என்று கேட்கிறேன். அப்படியே வாங்கினாலும் கொடுப்பது யார்? எப்படி? எங்கே என்ற விவரம் இவருக்குத் தெரியுமா......

......ஒருவன் தன்னைக் கழுதையாக்கிக் கொண்டால் மற்றவர்கள் அவன்மீது அழுக்குச் சுமைகளைப் போடாது என்ன செய்வார்கள்?......

......முன்னதுக்கு ம. பொ. சி. பொருந்தும்......

—சங்கப்பலகை

"நானும் இனிமேல் கிருஷ்ண லீலை செய்யப் போகிறேன் அம்மா"......

—விடுதலையில் குத்தூசி

எனக்கென்னமோ அசிஸ்டெண்ட் ஸ்டேஷன் மாஸ்டரின் பேச்சு வழ வழப்பாகத்தான் இருக்கிறது! அவர் பேச்சில் உண்மையிருப்பதாக எனக்குத் தெரியவில்லை......

—இன்பக்கலை

......ஆண்மைக்கு வரவேற்பளியுங்கள். 'பிராண மித்ரா' ஆண்மை! வீர்யம்!! தாது பலம்!!!......

—இன்பக்கலையில் ஒரு விளம்பரம்

......தமிழ் இன உணர்ச்சி இல்லாமல் தூங்குவதற்காக தலைவர் ம. பொ. சி. தமிழர்களின் உரிமைக்குரலை எழுப்பாமல் இருக்கமுடியுமா?......

—சங்கப்பலகை

அப்படியானால் அவரைத் தன் மானமில்லாத் தமிழரென்று சொல்லுகிறீர்கள்?

—தமிழ்முழக்கம்

விண்ணவர் உலகில் அப்சரசுகள் என்ற கன்னிகைகள் உள்ளனர் என்பது பெரும்பாலும் மங்கலங்களில் ஈடுபாடுடைய தாங்கள் கேள்விப்பட்ட விஷயமே!......

—அமுதசுரபி

உருளைக்கிழங்கு விற்கிற விலையில், கடைசியில நான் அதைத் துரத்தி விரட்டிவிட்டேன் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.

—குமுதம் (10-7-54)

மாதவிடாய் நின்று போனதா?

—ஒரு விளம்பரம்

கல்கியும், கடவுளும்

நம்மவர்கள் எவ்வளவுசுலபமாய் புண்ணியம் சம்பாதிக்க விரும்புகிறார்கள் என்பதை எண்ணும்போது மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. நான் சிறுபையனாயிருந்த காலத்தில் ஒரு சமயம் திடீரென்று எங்கள் சுற்றுப்பக்கத்தில் தேங்காய் விலை அசாத்திய கிராக்கி ஆயிற்று. விசாரித்ததில், எங்கள் ஊருக்குப் பன்னிரண்டு மைல் தூரத்தில், ஒரு வயலிலிருந்து ஒரு பிள்ளையார் விக்கிரகம் அகப்பட்டதாகவும், அதைப் பக்கத்திலுள்ள திடலில் எடுத்துவைத்துப் பிரதிஷ்டை செய்திருப்பதாகவும், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அந்தப் பிள்ளையார், கேட்பவர்களுக்குக் கேட்ட வரம் அளிக்கிறார் என்றும், ஆகையால் ஆயிரக்கணக்கான மக்கள் அங்கே போகிறார்களென்றும் அவருக்கு ஏராளமான தேங்காய்கள் உடைபடுவதன் காரணமாகவே தேங்காய் கிராக்கி ஆகிவிட்டதாகவும் அறிந்துகொண்டேன்.

குஷ்டரோகம் முதல் வயிற்றுவலி வரை சகல ரோகங்களையும் அந்தப் பிள்ளையார் நிவர்த்திசெய்தார். கல்யாணம் ஆகாதவர்களுக்குக் கல்யாணம் பண்ணிவைத்தார். குழந்தை இல்லாதவர்களுக்குக் குழந்தை வரம்கொடுத்தார். வயல்கள் நன்றாக விளையும்படி செய்தார். குறைந்த வட்டிக்குக் கடன் வாங்கிக் கொடுத்தார். மாடு, கன்றுகள் செழிக்கும்படி செய்தார். இது மட்டுமா? தம்மை அண்டியவர்களுடைய விரோதிகளை நசிக்கச் செய்தார். அவர்களுடைய மாடு, கன்றுகள் கோமாரியில் சாகும்படி செய்தார். பரஸ்பரம் விரோதிகள் இருவர் சேர்ந்தாற்போலப் போய்த் தங்கள் தங்கள் எதிரிகள் மடிந்து போகவேண்டுமென்று பிரார்த்தித்தால் இரண்டு பேருடைய குடும்பங்களும் நசித்துப் போகும்படி செய்தார்.

பிள்ளையாருடைய இவ்வளவு சக்தியும் நாற்பத்தைந்து நாள் தான் இருந்தது. அப்புறம் திடீரென்று குறையத் தொடங்கி, கொஞ்ச நாளைக்குப் பிறகு அடியோடு மறைந்துவிட்டது. இப்போது அப்பிள்ளையார் தவளைகளுக்கும், நண்டுகளுக்கும் வரம் அளித்துக் கொண்டிருக்கிறார் எனக் கருதுகிறேன்.

'ஆனந்த விகடன்' 5-8-1934 இதழில் கல்கி எழுதியது

நேஷனல் பிளான் சர்ட்டிபிகேட்டுகளை வாங்குக.

—மறு விளம்பரம்

ராஜ்ய முதல் மந்திரிகளுக்கு நன்றாகப் பேசத் தெரிவதோடு, பாடவும் தெரிந்திருந்தால், சமயத்திற்கு உபயோகப்படும்

—ஆனந்தவிகடன் (27-3-55)

இலக்கியத்துறையில் எல்லாம் உணர்ந்தவர்போல அடிக்கடி அபிப்பிராயம் கூற முற்படுவதும், ஆராய்ச்சி என்ற பெயரால் ஆபாசக் கருத்துக்களை வெளியிடுவதும்......

—ம. பொ. சி.
(அக்டோபர் 'தமிழன் குரலில்')

◉

காஞ்சி
கலை விழா

(ஏழை மாணவர் உதவி நிதிக்கு)
காஞ்சிபுரம்
கண்ணன் டாக்கீஸ் மைதானத்தில்

நாடகங்கள் இரவு 10-மணிக்கு

30-3-55
மகாராணி
செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டர் திரு. லோபோ பிரபு அவர்கள் தலைமையில்
எஸ். எஸ். ராசேந்திரன்
டி. வி. நாராயணசாமி
சி. ஆர் ராஜகுமாரி
லட்சுமிகாந்தம்

31-3-55
இன்பநாள்
திரு. எஸ். சுயம்பிரகாசம், எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில்
மனோகர், வித்யாவதி, பீர்முகமது

1-4-55
ஆசை நினைவு
திரு. டி. சண்முகம் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில்
எம். ஜி. ராமச்சந்திரன்
எம். ஜி. சக்கரபாணி
ஜி. சகுந்தலா
என். எஸ். நாராயணபிள்ளை

2-4-55
பகைவனின் காதலி
திரு. எஸ். தெய்வசிகாமணி, எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில்
எம். ஜி. ராமச்சந்திரன் குழுவினர்

3-4-55
மணிநாட்டு கூனன்
திரு. ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில்
தியாயகராய கல்லூரி கலைக்குழு

4-4-55
எதிர்பார்த்தது
திரு. ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையில்
தியாகராய கல்லூரி கலைக்குழு

5-4-55
தளபதி
அறிஞர் **அண்ணா** அவர்கள் தலைமையில்
என். எஸ். கிருஷ்ணன்
டி. ஏ. மதுரம் நடிப்பது.

விழா முழுமைக்கும்
ரிசர்வ் நன்கொடைச்சீட்டு சேர் ரூ. 25-0-0
ரிசர்வ் நுழைவுச் சீட்டு சேர் ரூ. 10-0-0

ஒவ்வொரு நாளும்
சேர் 2-0-0
தரை 0-12-0
பெண்கள் 0-8-0

பிரிவுத் துன்பம்

எழிலரசியே !

இதய வானத்திலே உன் இன் குரல் கேட்டுக்கொண்டே இருக்கிறது. உன் அமைதியான உள்ளமும் அதில் பாய்ந்து வரும் அன்புப் பிணைப்பும் வையத்தில் வாழும் என்னை வானுக்கு அழைத்துச் செல்கின்றனவே ! வாழ்வை வெறுத்து ஒதுக்கிய என்னை, வாழ்வில்விருப்புக் கொள்ளச் செய்கின்றனவே ! வாழ்க உன் அன்புள்ளம் ! வளர்க உன் அமைதி உள்ளம் !

உனது அன்புள்ளம் என் அல்லலை நீக்கும் அமுது ! உன் அமைதியுருவம் எனக்கு ஆனந்தம் தரும் அருந் தென்றல். அந்தத் தென்றலிலே என் உள்ளத்தைப் பறிகொடுத்தேன். உன் மத்தனாய் உலவுகின்றேன் !

அழகுச்சிலையே !

உன் அழகைக் கண்டுதான் முன்னோர் அழகுக்கு இலக்கணம் வகுத்தனர் போலும் ! ஓவியமும் சிற்பமும் உன் உருவைத்தான் உணர்த்துகின்றன ! உன் உருவில்தான் உலகமே உறைந்திருக்கிறது !

அன்பு உருவமே !

உன் இன்ப நினைவால் என் என்பெல்லாம் தேய்ந்து நான்துரும்பாக இருப்பதைப் பார். உன் அன்புருவத்தைச் சதா எண்ணி எண்ணி அதிலே அமைதி காணத் துடிக்கும் இந்த ஏழை உருவத்தைப் பார் ! உன் பிரிவால் இதயத் துடிப்பே நின்று விடுமோ என்று அஞ்சும் என்னைத் திரும்பிப் பார் ! ''பால் வழியும் வதனம்'' என்றெல்லாம் நீ பெருமையாய்ச் சொல்வாயே, அந்தப் பால் வழியும் வதனம், உன் ஏக்கத்தால் பாழ்பட்டுப் போனதைப் பார் ! முன்னர் நீ பார்த்துப் பார்த்து பூரித்த இந்த திரேகம் தேய்ந்து ஓடாகியிருப்பதைப்பார் ! 'அன்பு செய்தோன் சாதல் அடைந்தான்' என்பதுதான் இவ்வுலக நியதியா !

அன்பே! நான் இங்கே-நீ அங்கே! இடையில் உள்ள தூரம் நினைக்கக் கூட முடியாத தூரம் ! ஏன் இந்த நிலை ? என்னுடன் வந்துவிடு! வா! வானிலே பறக்கலாம் ! பொன் சிறக்கதிரவன் அருகில் செல்லலாம். தண்மதி தன் மருங்கில் சென்று இன்பலோகத்தை எட்டிப் பிடிக்கலாம். நம் இன்ப வாழ்விற்கு நிலவு வாழ்த்துக் கூறட்டும் ! சூழ்ந்துள்ள தாரகைகள் நம் இன்பவாழ்விற்கு இசை எழுப்பட்டும் ! துன்பத்தைத் துரத்துவோம் ! இன்பத்தை எட்டிப்பிடிப்போம் ! வா என் அருகில் ! தாமதம் செய்யாதே! தாமதித்தால் என் உயிர் துடிக்கும், உள்ளம் நோகும், உடல் வாடும்.

மங்கையே !

மந்த மாருதம் வீசிய அந்திப் போதில் நாம் சந்தித்தபோது !...... 'என் உயிர், உடல், உள்ளம் அனைத்தும் உங்கள் உரிமை என்று பகர்ந்தாயே ! இன்று ஏன் எட்ட நின்று வாட்டி வதைக்கிறாய் ? ஏன் தூரத்தில் வாழ்ந்து துயரத்தை அதிகரிக்கிறாய் ? அருகில் அமர்ந்து ஆனந்தத்தை அள்ளி அள்ளித் தரமாட்டாயா ? பக்கலில் அமர்ந்து பால் வழியும் வதனத்தை என்பால்திருப்பமாட்டாயா ?

உலகம் முழுவதும் கேட்கும் என் ஓலம் உன் செவிகளில் மட்டும் விழவில்லையா ?

நாடெல்லாம் என் எழுத்தைப் புரிந்துகொண்டது ! ஆனால் நங்கை நீதான் என்னை,- என் எழுத்தைப் புரிந்து கொள்ளாதிருக்கிறாய் ! அன்பே ! அன்றொரு நாள், நான் ஏதோ மனக்குழப்பத்தால் உன்னுடன் ஊடல் செய்து கொண்டேனே ! அதை எண்ணிப் பிரிந்துசென்றாயா ? அந்த ஏக்கத்தால்என்னை நோக்காமல் என் ஆவியைப் போக்குகிறாயா ? எழிலணங்கே! இளங்காதலர்கள் ஊடல் செய்தல் வேண்டும்-காதல் வாழ்க்கையிலே ஊடல் இருக்கத்தான் செய்யும்-என்பது நீ அறிந்ததுதானே ! இதில் புதுமையொன்றும் இல்லையே ! பின்னும் நீ ஏன் மௌனம் காட்டுகிறாய் ?

வசந்தத்தின் வனப்பிலே நீயும் நானும் வானம்பாடிகளாக உலவினோமே! அந்த நிகழ்ச்சி உன் உள்ளத்தில் இன்ப நினைவை ஏற்படுத்தவில்லையா ? எதிர்காலத்தைப் பற்றிய இன்பக்கனவு பல கண்டோமே ? அந்தக் கனவு நனவு ஆகும் நாளை எதிர்பார்க்கவில்லையா ?

காற்றிலே கலந்து வருகின்ற உன் கீதம் இன்று எங்கே சென்றது ? ஒரு காலத்தில் உன் இசை வெள்ளத்தில் திளைத்த நான் இப்போது துன்ப வெள்ளத்தில் தத்தளிக்கிறேனே ! இதைக் கண்டுகூட உன் அன்புள்ளம் வாளாவிருக்கிறதே ! இன்பத்தில் துணை இருப்பினும் இல்லாவிடினும் துன்பத்தில் பங்கு கொள்ளத்தானே துணைவேண்டும்? ஆனால், நீ துணை செய்யாமல் என் சோதனை செய்கிறாய் ?

நம் அன்புறவில் ஒருநாள் நீ அல்லலுற்றபோதில், ''துன்பத்தைத் தாங்கும் வல்லமை எனக்கில்லை'' என்று புகன்றாயே, அவ்வல்லமை எனக்கு மட்டும் உண்டு என்று எண்ணிவிட்டாயா ? நான் ஆண் மகன் தானே, ஆதலால் துன்பத்தைத் தாங்கிக் கொள்வேன் என்று எதிர்பார்க்கின்றாயா ? என்னிடமும் பெண் உள்ளம் உண்டு ! துன்பம் நேரும்போது என் உள்ளமும் வாடத்தான் செய்யும் ! அன்பே என் அருகில் அமர்ந்து, 'துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ இன்பம் சேர்த்தால்,' ஒரு வேளை என் துன்பம் தணியலாம். முதலில் யாழை மீட்டு ! துன்பத்தை ஓட்டு ! என் வாழ்வை நிலைநாட்டு !

உள்ளத்தரசியே !

உன் பிரிவு என் கண்களுக்கு உறக்கத்தை நல்கவில்லையே ! உன் உறவுதான் என்னைத் துறவு பூணச் செய்யாமல் தடுத்து விட்டது என்று சொன்னேனே ! அதனை மறந்து விட்டாயா ? உன் உறவால்தான் உலகில் உலவுகிறேன் என்று உரைத்தேனே ! அதையும் மறந்து விட்டாயா ? இல்லை ; நீ மறந்திருக்க மாட்டாய் ! மறந்திருக்க முடியாது உன்னால்! பின்னும் ஏன் மௌனம் காட்டுகிறாய் ?

இன்னமுதே !

அன்றொரு நாள் !......உள்ளம் நொந்து, உயிர் வாடி, உடல் தள்ளாடி உன்னை நாடி வந்த போது நீ அதர பானத்தை அள்ளி அள்ளித் தந்தாய் ! தெள்ளிய தேனமுதை உண்டதனால் என் உள்ளமும் துள்ளிக் குதித்தது. களிப்பு மிகுதியால் கண் தெரியாமல் தவித்தேன்.

''பாலைவனமெனப் பாழ்பட்டுக் கிடந்த என் உள்ளத்தில் பனிநீர் போல அரும்பிய அன்பு பாலாறு எனப் பெருக்கெடுத்து ஓட விடாமல் பாழ்படுத்தி விடாதீர்கள்'' என்று என்னை வேண்டினாயே ! வேண்டுதல் எனக்கு மட்டும்தானா ? உனக்கு அந்த வேண்டுதல் வேண்டாம் என்று எண்ணிவிட்டாயா ? அன்பே, சற்று யோசித்துப்பார். அந்த வேண்டுதல் உனக்குந்தானே ! ஒரு கை தட்டினால் ஓசை எழும் என்று எண்ணுவது உலகை அறியாதார் போக்கல்லவா ? நீ உலகத்தை நன்கு தெரிந்தவளாயிற்றே ! அதிலும் நம் இன்பலோகத்தைப் பற்றிய இயல்புகளை நீ நன்கறிந்திருக்கிறாயே ! இருந்தும் ஏன் என்னை இடர்ப்படச் செய்கிறாய் ?

கோடைகாலத்தில் ஒரு நாள்.... உன் விருப்பப்படி 'வெய்யில் தாழ' வந்தேன், 'கொய்யாக் கனியைக் கொய்து செல்ல'' ஆனால் நீயோ உண்மையில் கொய்யாக் கனியாக ஒய்யாரமாக இருந்தாய் - இருந்து வருகிறாய் !

இன்பத்தின இலக்கணமே !

குளிர்ந்த நீரில் வாழும் மீனைக் கொதிக்கும் கோடை மணலில் போடாதே ! வெப்பம் தாங்காது வேதனைப்பட்டு மாண்டுவிடும் ! உன் பிரிவு என்னை அந்த வகையிலே தான் வாட்டுகிறது ! துன்பம் தாங்காமல் துடிதுடிக்கிறேன். அன்பே! வேண்டாம் ! இனியும் நீ என்னைப் பிரிந்திருக்க வேண்டாம் ! வந்துவிடு ! உடனே வந்துவிடு !

—தமிழ்ப்பித்தன்

பூமாலைச் செண்டு

இவ்வளவு போதுமே !

அமெரிக்க நாட்டுத் தலைவராயிருந்த ஆப்ரகாம் லிங்கனிடம் ஒரு பெண்மணி அதிகார தோரணையில் பின் வருமாறு பேசினாள்.- ''தலைவர் அவர்களே, என்னுடைய மகனைக் கர்னலாக நியமிக்க வேண்டுகிறேன். இவ்வேண்டுகோள் உரிமையை அடிப்படையாகக் கொண்டதே யொழிய ஒரு சலுகை அல்ல. என்னுடைய தாத்தா லெக்ஸிங்டனில் போர் செய்திருக்கிறார். இது மட்டுமா ? என்னுடைய மாமன் ஒருவர்தான் பிளேடன்ஸ் பாக்கில் புறமுதுகிட்டு ஓடாதவர். என்னுடைய தந்தையார் நியூஆர்லியன்ஸில் சண்டையில் கலந்து கொண்டிருக்கிறார். என் கணவரோ மாண்டிரிப் போர்க்களத்தில் உயிரை நீத்திருக்கிறார். இவற்றை எண்ணிப் பார்த்து என் வேண்டுகோளை ஏற்பீர்கள் என்று நம்புகிறேன்.

லிங்கன் அமைதியாகச் சிரித்துக் கொண்டே பின்வரும் பதிலைக் கூறினார்:- ''அம்மணி உங்கள் குடும்பம் நாட்டிற்குப் போதுமான அளவு தொண்டு செய்துவிட்டதென்றே நினைக்கிறேன். எனவே இத்தடவை மற்றவர்களுக்குச் சந்தர்ப்ப மளிப்பது நல்லதல்லவா? ''

உளவாளி

மஞ்சூரியாவில் அமெரிக்க உத்தியோகஸ்தர் ஒருவருடைய மனைவியை போலீஸ் உளவாளிகள் தொடர்ந்தார்கள். இதை அவள் எப்படியோ அறிந்து கொண்டாள்.

ஒரு நாள் அவன் தன் இருப்பிடத்தை விட்டு வெளியே போய்த் திரும்பி வந்தபோது, ஓர் ஆசாமி தனது டிரங்குப் பெட்டியில் ஏதோ திரிசமன் செய்து கொண்டிருக்கக் கண்டாள். இவன் ஓர் உளவாளியே, என்று அவள் ஊகித்தாள். ஆனாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் ''ஏண்டா வேலைக்காரா ? ஒன்றும் செய்யாமல் சோம்பேறித்தனமாக உட்கார்ந்திருக்கிறாயே ? '' என்றாள்.

அவளது பாசாங்கை அறியாமல், 'ஓகோ இதுவும் நல்லது தான், நம்மையாரோ வேலைக்காரன்என்று இவள் நினைத்திருக்கிறாள். நல்லது'' என்று நினைத்த உளவாளி அவள் சொன்ன வேலையையெல்லாம் நாள் முழுவதும் கர்ம சிரத்தையுடன் செய்து முடித்தான்.

இரவு நேரமானதும் ''போதுமப்பா, போலீஸ் உபகாரியே போ'' என்றாள் அம்மணி. ஆசாமி வேறு வேலைக்கு மாற்றப்பட்டான்.

என்ன கட்டை ?

கலைஞர் கருணாநிதி அவர்களும் மற்றும் சிலரும் ஒரு தடவை ஸ்டுடியோ ஒன்றின் இசை அரங்கத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அப்போது இசை அமைப்பாளரும் மற்றும் சிலரும் 'எந்தெந்த பாகவதர்களுக்கு எத்தனை கட்டை சுதி' என்று ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருந்தார்கள். அதில் ஒரு நண்பர் ஆர்மோனியத்தின் எதிரில் உட்கார்ந்து சுதி கூட்டிய படி, 'எனக்கு என்ன கட்டை' எனக்கு என்ன கட்டை' என்று கேட்டுக் கொண்டேயிருந்தார். தோழர் கருணாநிதி சுருக்கமாக ''புத்தி, புத்தி'' என்றார்.

தேவை

ப்ளாக் ப்ராசசில் வேலை தெரிந்தவர்கள் தேவை. வேலைக்குத் தகுந்த சம்பளம் தரப்படும். நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பிக்கவும்.

விபரங்களுக்கு :

மதராஸ் ப்ராசஸ்

5, ப்ளாக்கர்ஸ் ரோடு,

மவுண்ட் ரோடு :: சென்

கழகச் செய்திகள்

◉ 25-3-55 அன்று மாலை 6 மணிக்கு சூளை, சௌந்தர பாண்டியனார் நினைவுப் படிப்பக முதலாவது ஆண்டு விழா தோழர் மு. மாசிலாமணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முதலில் தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன், தோழர் தமிழ்ப்பித்தன் (தென்றல் துணையாசிரியர்) சொற்பொழிவு செய்தனர். அதன் பின்னர் தோழர் கண்ணதாசன் அவர்கள் நீண்டதொரு சொற்பொழி வாற்றினார். சௌந்தர பாண்டியனார் செய்த தொண்டினையும் இன்றைய அரசியல் நிலையையும் பற்றிப் பேசினார். அவர் பேசியதன் சுருக்கம் :

"போராட்டக் காலத்திலே மற்ற கட்சிகளும் பட்ட தொல்லைகளைத் தான் தி. மு. கழகமும் பட்டது - பட்டு வருகிறது. மற்றக் கட்சிகளின் போராட்டம் ஓய்ந்தது. எனவே, தொல்லையும் ஓய்ந்தது. போராட்டத்தைக்கண்டு தூற்றுவர் மாற்றுக் கட்சிக்காரர்கள், தகாத வார்த்தை சொல்லித் தாக்குவர். அந்த வகையிலே திராவிடர் இயக்கம் அனுபவிக்க வேண்டிய தொல்லைகள் ஏராளம். எந்த நேரத்திலும் திராவிட இயக்கத்தார் தகாத வார்த்தைகளைக் கேட்க வேண்டியிருக்கிறது. தலைவர் பெரியார் அவர்கட்கும், அழகிரி அவர்கட்கும், சௌந்தர பாண்டியனார் அவர்கட்கும் இருந்த எதிர்ப்பை 30 ஆண்டுகட்குப் பின்னரும் சந்திக்க நேருகிறது என்றால் திராவிடர் இயக்கம் ஏதோ ஒரு நல்ல காரியத்தை சாதிக்கப் போகிறது என்றுதானே அர்த்தம்!

பிரகாசம் மந்திரியாகஇருந்தார். பின்னர் ஓமந்தூரார் அமைச்சரானார். அதன் பின்னர் குமாரசாமி ராஜா மந்திரியானார். அடுத்து ஆச்சாரியார் அவர்கள் அமைச்சரானார்கள்! இந்த நால்வரும் நியாயமோ, அநியாயமோ எந்த நேரமும் பகுத்தறிவு வாதிகளைச் சாடுவர். ஓமந்தூரார் நம்மை எதிர்க்காதிருந்தாலும், பின்னால் இருந்து சிலர் உந்தினராதலால், எதிர்த்தார். பின்னர் குமாரசாமி ராஜாவின் ஆட்சியிலே 'ஆரியமாயை' இலட்சிய வரலாறு 'தடை செய்யப்பட்டன. அடிப்படை அவசர அவசியமில்லாவிடினும்கூட அந்த நிகழ்ச்சிகள் நிறைவேறின. காரணம் எதும் இல்லாவிடினும்கூட பார்ப்பனர்களைத் தன்னைக் கட்டி வைக்க வேண்டிய நிலை குமாரசாமி ராஜாவிற்கு இருந்தது. ராஜாஜி ஆட்சி வந்தது. அவர் நம் பரம்பரை எதிரி. நம்மை எப்போதும் கண்களிலேயே வைத்துக்கொண்டிருப்பவர். அவரது ஆட்சியிலே சமுதாயத்தின் வாழ்வையே அரிக்கும் கல்வித்திட்டத்தைக் கொண்டுவந்தார். நாம் அதை எதிர்த்துப் போரிட வேண்டி வந்தது. அதுபோது, முன்னர் சந்தித்த - சம்பாதித்த தொல்லைகளை மீண்டும் சம்பாதிக்க வேண்டி வந்தது. பின்னர் காமராசர் வந்தார். அவருக்கும் திராவிட கழகத்திற்கும் நல் உறவு - ஒட்டுறவு இருப்பதாகக் காங்கிரஸ் வட்டாரத்திலேயே கூறப்படுகிறது. 'காமராசர்வந்திருக்கிறார். அவர் இருக்கும் வரை சமாதானமாகவே இருந்து சமாதானமாகவே ...ய்விடுவார்' என்று சொல்கிறார் ...லர். அவர்கள் நல்லவர்கள். அங்குள்ள சில விஷமிகள் காங்கிரசைப் பற்றி என்னென்ன பேசினார், பார்த்தாயா இப்போது காமராசர் வந்தார்; பெரியாரை பாக்கெட்டில போட்டுவிட்டார்" என்று சொல்கிறார்கள்.

அண்ணாவோ, அல்லது அவர்தம் தம்பிகளோ காமராசரை ஆதரித்ததாக நேரடியாகச் சொல்லவில்லை. ஆனால், பெரியார் நேரடியாகக் காமராசரை ஆதரித்திருக்கிறார். பெரியார் ஆதரிப்பதால் அண்ணாவும் ஆதரிப்பார் என்று பொதுக்கணக்குப் போட்டார்கள பலர். ஆனால், அந்த நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் தனக்கே உரித்தான பாணியில் வாயை மூடிக்கொண்டு மௌனமாக இருந்துவிட்டார். எனவே, அண்ணாவிற்கும் காமராசருக்கும் என்ன உறவு என்பது இன்றுவரை புரியாமல் இருக்கிறது. காமராசருக்கே அண்ணா ஒரு கேள்விக்குறியாக இருந்து வருகிறார்! அந்த அளவிற்கு எச்சரிக்கையாக இருந்து செயல்பட்டு வருகிறார். ஆகவே, சமுதாயத்திலே எதிர்ப்பு இருக்கும்போது காமராசர் நட்பு நமக்கு இருக்கிறது என்று எண்ணி நம்பிக்கொண்டு இருக்கிற நிலை அண்ணாவுக்கோ அவர்தம் தம்பிகளுக்கோ கிடையாது.

முன்னேற்றக் கழகத்திற்கு ஒரே எண்ணம் உண்டு. எப்போது காமராசரின் பின்னால் போகவேண்டும் என்பதைத் தெரிந்துதான் வைத்திருக்கிறது. திராவிடநாடு பிரிவினைக்குக் காமராசர் உறுதியளித்தால், 8 மைல் வேகத்தில் பெரியார் ஓடினால், 30 மைல் வேகத்தில் ஓடுவோம் நாம். நமது அடிப்படைக் கொள்கை முக்கியமானது. காமராசர் மீது எவ்வளவு பாசம் உங்களுக்கு உண்டோ அவ்வளவு நமக்கும் உண்டு. ஆனால், அதைக் காட்டிலும் அதிகமான பற்றுதல் எங்கள் கொள்கையிடம் உண்டு.

ஐந்தாண்டுத் திட்டத்தால் திராவிடம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. வடக்கிற்கும் தெற்கிற்கும் உள்ள பேதத்தைக் கண்டிக்கும் நிர்பந்தம் பச்சைத்தமிழரான காமராசருக்குக் குறைந்துவிடக்கூடாது. அண்ணா திடீரென்று இந்தக் கண்டனத் திட்டத்தைக் கொண்டுவந்தாரென்றால் அதிலே உள் அர்த்தம் உண்டு. இந்தத் திட்டத்தால் அங்கே வேலைக்காரர்களுக்கு வேலை நிறையக் கிடைக்கும். இங்கே உள்ளவர்களையும் இல்லையென்று சொல்லி அனுப்ப நேரும். இத்திட்டத்தால் வரி 'ஒருவழிப் போக்குவரத்து' (One Way Traffic) மாதிரி வடநாட்டிற்கே போகிறது. ஆசியாவின் ஜோதிக்கு இது தெரியாதா என்ன? நிறையப்பணத்தை மத்தியசர்க்கார் வைத்துக்கொள்கிறதே! சென்னைக்குத் திருப்பிக்கேட்க நாதியில்லை! காமராசர் கேட்டுப் பார்ப்பதுதானே! பச்சைத்தமிழர், ஊதாத்தமிழர் ஆயினும் சரி காங்கிரஸில் இருந்தால் தமிழராக முடியாது, டம்ளராகத்தான் முடியும்! பிறருக்கு எடுத்து எடுத்து ஊற்றத்தான் முடியும்.

திராவிடம் என்ற சொல் தமிழிலே இல்லை என்கிறார் சிலர். அந்தச் சொல்லே சிலருக்கு வெறுப்பாக இருக்கிறது. தோல் கசக்கிறது என்றால் பழமுமா கசக்கிறது? திராவிடம் என்ற சொல் தோல் - அதன் உள்ளே இருப்பது சுளை. கொள்கை என்ற சுளையைத் தவறு என்று சொல்லமுடியுமா?

நாம் எல்லாம் பாரதமாதாபுத்திரர்கள் ஆகமுடியாது என்பதற்கு ஒரே ஒரு உபமானம் போதும்.

எவிட போயி? என்கின்றான்
மலையாளத்தான்
எக்கட போத்தாரு? என்கின்றான்
தெலுங்கன்
எங்கே போகிறாய்? என்கிறான்
தமிழன்
கஹாங் ஜாத்தா? என்கிறான்
வடநாட்டான்

இதிலேயே எவ்வளவு வேற்றுமை? எனவே, எப்படி ஒற்றுமை ஏற்பட முடியும்? பொருளாதாரத்திலும் சரி, அரசியலிலும் சரி, தார்மீகத்திலும் சரி, பண்பாட்டிலும் சரி எந்த விதமான ஒற்றுமையும் கிடையாது. வடநாடு வேறு, தென்னாடு வேறு என்பது சுத்தமாகத் தெரிகிறது.

அன்று, தமிழ்நாட்டானை இகழ்ந்து பேசியதால், இமயம் சென்று, இகழ்ந்த ஆரிய அரசர்களின் தலைகளிலே கல்லை வைத்து, தன் நாட்டிற்கு அழைத்து வந்தான் சேரன். ஆனால், இன்று தலைகீழாக இருக்கிறது நிலை! வடக்கே இருந்து ஒரு கார்டு வந்தால்போதும், இங்கிருந்து கல்லைக் கொண்டு செல்லத் தயாராய் இருக்கிறார்கள் நம் அமைச்சர்கள்"

இறுதியாக, தலைவர் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

◉ 27-3-55ஞாயிறு அன்று மாலை 4 மணிக்கு தோழர் இராதாகிருட்டிணன் தலைமையில் பெரியகுளம் தி. மு. க. செயற்குழுத் தேர்தல் நடைபெற்றது. வ. எஸ். அனிபா செயலாளராகவும், எம். கே. ஆறுமுகம் துணைச்செயலாளராகவும், பி. அப்துல்காதர் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆர். வெற்றிச்செல்வன், ப. கு. இராமசாமி ஆகிய இருவரும் மாவட்டப்பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

◉ 27-3-55 ஞாயிறு மாலை 5 மணிக்கு சிதம்பரம் தி. மு. க. தேர்தல் கூட்டம் தோழர் பொ. சொக்கலிங்கம் தலைமையில் துவங்கியது. இரா. சக்ரவர்த்தி செயலாளராகவும், ஜி. வி. கோபால் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் தில்லை-வில்லாளன், பா. வை. தெட்சிணாமூர்த்தி இருவரும் மாவட்டப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

◉ 27-3-55 ஞாயிறு திருச்சியில் தி. மு. க. தேர்தல், தோழர் அம்பில் தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் எம். எஸ். மணி. நகர தி. மு. க. செயலாளராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சு. அருணகிரி துணைச் செயலாளராகவும், தோழர் ஏ. நடராசன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் நகர தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கள் இருபத்தோரு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் எம். எஸ். மணி, ஏ. நடராசன், ஜி. பராங்குசம், கே. கிருட்டிணமூர்த்தி, தோ. பா. கோபாலகிருட்டிணன், தி. வீ. முத்துக்கிருட்டிணன், எஸ். சுப்பிரமணியம், எஸ். ஏ. ஜி. ராபி, ஐ. எம். செரீப், எஸ். நெடுமாறன், இ. ராதாகிருட்டிணன் முதலியோர் மாவட்டப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

'மாதிரி'

★

தொக்கியூர் சோலையப்பர் குதித்தார்; ஆடினார்; ஆர்ப்பாட்டம் செய்தார். அப்பொழுதுதான் அவர் படுக்கையை விட்டுஎழுந்திருக்கிறார், குளித்து, பலகாரம் உண்டு, வயலுக்குச் செல்லவேண்டும்.

வேலையாட்கள் பற்பொடி கொண்டு வந்தனர்.

"எனக்குப்பற்பொடி வேண்டாம். 'பற்பொடிமாதிரி' வேண்டும்! கொண்டுவாருங்கள்!" என்று பொறி வீசினார், சோலையப்பர்.

வேலையாட்கள் மாவுபோன்ற மண்ணைக்கொண்டு வந்தனர்.

சோலையப்பர் பல்துலக்கினார்.

குளிப்பதற்கு வேலையாட்கள் தண்ணீர் கொண்டு வந்தனர்.

"எனக்குத் தண்ணீர் வேண்டாம். 'தண்ணீர் மாதிரி' தான் வேண்டும்!" என்று கனல்கக்கினார் சோலையப்பர்.

வேலையாட்கள் 'தண்ணீர் மாதிரி' உள்ள போதை பானம் கொண்டு வந்தனர்.

சோலையப்பர் குளித்தார்.

சாப்பிடுவதற்கு வேலையாட்கள் பொங்கலில் சாம்பார் ஊற்றிக் கொண்டு வந்தனர்.

"எனக்குப் பொங்கல் சாம்பார் வேண்டாம்! 'பொங்கல் சாம்பார் மாதிரி' தான் வேண்டும்!" என்று கதறினார் சோலையப்பர்.

வேலையாட்கள், பொங்கல் சாம்பார் மாதிரி காட்சியளித்த 'சொல்லக் கூடாததை' கொண்டு வந்தனர்.

சோலையப்பர் சாப்பிட்டார்.

அவர் வயலுக்குச் செல்வதற்காக, வண்டியில் குதிரை பூட்டினார்கள், வேலைக்காரர்கள்.

"எனக்கு குதிரை வேண்டாம்; 'குதிரை மாதிரி' தான் வேண்டும்" என்று கூறினார், சோலையப்பர்.

வேலையாட்கள் அவசரமாக ஓடினர். ஒரு கழுதையைக் கொண்டுவந்து வண்டியில் பூட்டினர்!

முக்கிய குறிப்பு: ஆவடியில் நேரு, 'சோசலிச மாதிரி' தான் நமக்கு வேண்டுமென்றார். காங்கிரஸ்காரர்கள் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

◉

ஓர் அறிவிப்பு

மதுரைத் தோழர் திரு. சங்கரய்யாவிடம் தென்றல் சந்தா சேர்க்கும்படி சொல்லியிருந்தோம். அவர் சில பேரைச் சேர்த்ததாகத் தெரிகிறது. ஆனால் எங்களுக்கு அது தாக்கலைத் தெரிவிக்கவில்லை. எனவே இனிமேல் யாரும் அவரிடம் சந்தாதாராக சேர தேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம். அந்த ரசீதுகள் ரத்து செய்யப்பட்டு விட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார், *எம்.ஏ., எல்.டி.*

பதில் தருகிறார்.

முனிசாமி, கோளத்தூர்

க்குவமை இல்லாதான்
தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
க்கவலை மாற்ற லரிது.
—புதுமைப்பொருள் தருக.

ற்பண்பும் தீயபண்பும் கலந்தே
டமும் எதனிடமும் காணப்படு
. தூய நற்பண்பு ஒரு குறிக்
ர் கற்பனை. அதுவும் அறிவு
னேறுந்தோறும் புதுப்புது
நோக்கி விரிவாகிறது. இக்
கோளே கால இடச்சூழல்
த, எல்லையற்ற அறிவுப் பொரு
, பண்டைத்தமிழறிஞர் கற்
செய்த 'இறைவன்' ('இறந்த'
து 'கடந்து' நிற்கும் கடவுள்).
ண்பும் அதற்கு உவமையல்ல.
ன்றால் அது தூய நற்பண்பு
அனைத்தின் தொகுதி. அதன்
சேர்ந்தார்க்கு' அதாவது
க் குறிக்கோளைக் கடைப்
த சான்றோர்க்குக் கவலையே
ாது. ஏனென்றால் அவர்கள்
ம் பொதுநலம், உலகநலம்,
லம் நோக்கியது. அதைச்
ளவு குறிக்கோள் நோக்கி
ப்பதன்மூலம் அவர்கள் இன்ப
தி அடைவர்.

◉

கோபால், சென்னை 2.

மரைக் கண்ணன் உலகு,
மோ கண்ணே பிணையோ
ல் நோக்கம் இம்மூன்றும்
த்து, இந்திரனே சாலுங்கரி
ன்றிற்கும் தங்கள் கருத்
அவா. மற்றும் வள்ளுவர்
ரைக் கண்ணன், கூற்றுவன்,
ன் போன்ற தன்மையினை
றோ என்பதை நன்கு
க எடுத்துச் சொல்லவும்.

க்குறள் ஓர் இலக்கிய ஏடு
ல் மட்டுமல்ல. இலக்கிய
மகள், அணிகள் ஆசிரியர்
க்கைக்குரியவை அல்ல. மொழி
அணிநயம், பொருள் விளக்
றியனவே. கல்வியைக் கலை
என்பதும், செல்வத்தைத்
ள் என்பதும், வீரத்தை
ள் என்பதும் அத்தகைய
வழக்கு. ஏழுகடல்-கருத்
ஆங்கிலேயர் வழக்கில்
ம் 'ஏழுகடல்களிலும்' (In All
ven Seas) என்ற தொடரைக்
றோம்.
ரைக் கண்ணன் உலகு,
, இந்திரனே சாலுங்கரி
இத்தகைய உவமை அணி,
ழக்குகளாகவே திருவள்ளு
யாண்டிருக்கிறார்.
துடன் இக்குறிப்புக்கள்
ய புராணக் குறிப்புக்கள்
கொள்வதற்கு வழி இடை
ராணங்கள் இன்றைய நிலை
ாகுக்கப்பட்டது கி. பி. 3ம்
ண்டிலேயே. அந்நூற்றுண்டு
றுச் செய்திகள் வரை

அவற்றில் இடம் பெற்றுள்ளன. அவற்றுக்கு முன்னைய புராண மரபு வைதிக ஆரியர் மரபல்ல. மக்கள் மரபு, புத்த சமண மரபு சார்ந்தவை. வைதிக மரபைவிட புத்த சமணமரபு மக்களின் பழைய மரபுக்கு அணித்தானவை. வள்ளுவர் கொண்ட பொருள் புத்த சமண மரபாகவோ அவற்றுக்கு முற்பட்ட மக்கள் மரபாகவோ தானிருக்க முடியும்.

புத்த சமணமரபுப்படி 'இந்திரன்' பிறர்மனை நயந்த பிற்காலக் காமுக இந்திரன் அல்ல. தவம் செய்து, இந்திர பதவி பெற்றவன்.

கூற்று, தங்கையைத் தாரமாகக் கொண்ட வைதிக புராண எமனல்ல. நீதிக்கடவுளாக, 'சமன்' என்ற பெயரால் கற்பனை செய்யப்பட்ட 'காலன்'. இக்கருத்து விளக்கத்தை நாலடியார் போன்ற சமண நூல்களில் காணலாம்.

தாமரைக் கண்ணன் உலகு, வைதிகப் புராணத்திய வைகுந்தம் அல்ல. வித்தியாதரர் தலைவன் தாமரைக்கண்ணன். அவன் உலகு வித்தியாதரர் உலகு. இது புத்த சமண நூல் மரபு.

திருவள்ளுவர் புத்த சமண சமயங்களுக்குப் பிற்பட்டவராக இருக்கலாம். அவர் மரபும் புத்த சமண மரபாய் இருக்கக்கூடும். அல்லது அவர் முற்பட்டவராயுமிருக்கலாம். அப்படியானால் மரபு மக்கள் மரபாய் இருக்கக்கூடும். இவை முற்றும் விளக்க வரலாற்று ஆராய்ச்சி வைதிக ஆரியர் பிடியிலிருந்து மீட்சி பெற்று இன்னும் முன்னேறவேண்டும்.

◉

எஸ். நடராசன், திண்டிவனம்.

சங்கப்புலவர்கள் எத்தனை பேர்? அவர்கள் பெயர்கள் என்ன? தயவு செய்து விளக்கவும்.

உறுப்பினராயுள்ள சங்கப் புலவர்கள் (கடைச்சங்கம்) நாற்பத்தொன்பது பேர் என்று கூறப்படுகிறது. பாடிய புலவர்கள் தொகை அதிகம் என்று 'இறையனார் அகப்பொருள் உரை'யால் தெரிகிறது. ஆனாலும் நமக்குக் கிடைத்துள்ள சங்கப் பாடல்களிலேயே நாம் 473 க்கு மேற்பட்ட புலவர்கள் பெயரை அறிகிறோம். புலவர் பெயர் தெரியாத பாடல்களும் உண்டு. புலவர்களின் பெயர் விபரங்களை சங்க இலக்கியம், சமாஜப் பதிப்பு (பக்கம் 1436-1460) பார்க்க.

◉

நாதன், சென்னை.

ஒருமைக் கண்தான் கற்றகல்வி
யொருவர்க்கு
எழுமையும் ஏமாப் புடைத்து

—என்ற வள்ளுவப் பெருமான் வாயுரைக்கு 'எழுமை' என்பது எழு பிறப்பு என்று பரிமேலழகர் உரை எழுதியிருக்கிறாரே! அது சரிதானா? இல்லை வேறு பொருள் உண்டா? இலக்கியச் சான்றுடன் விளக்குக!

'எழுமை,' 'எழு பிறப்பு' என்ற சொற்களை பரிமேலழகர் உயிரின் மறு பிறப்புக்கள் (ஜன்மங்கள்) என்ற பொருளில் எடுத்துக் கொண்டிருக்கிறார். தமிழ்ச்சொல்லாகிய 'பிறப்பு' இயல்பாக அந்த ஆரியப் பொருளைத் தருவதில்லை. குடும்பத்தின் பிறப்பு ஆகிய தலைமுறைகளைத்தான் அது குறிக்க வழியுண்டு. அது வரும் பாடல்களுக்கு இந்தப் பொருள், மற்றப் பொருளைவிட மிகவும் பொருத்தமாக இருக்கும். திருவள்ளுவர் உள்ளக் கருத்து இதுவே என்று கருதலாம்.

இந்த மொழிச் சான்றன்றி இலக்கியச் சான்று காட்டுவதற்கில்லை. திருவள்ளுவரைத் தவிர மற்றையோரும் இப்பொருளில் பிறப்பு என்ற சொல்லை வழங்கியிருக்கலாமானாலும், மறுபிறப்பு என்ற பொருளிலே அது படிப்படியாக மாறுபட்டு, உணரப்பட்டு வந்திருக்கிறது.

◉

ச. இராமையன், திருப்பாபுலியூர்

"இல்வாழ்வான் என்பான்
இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை"
—என்ற குறளில் கூறப்பட்ட 'மூவர்' என்று கூறப்படுவர்கள் யாவர்?

இயல்புடையமூவர் என்பதைப் பரிமேலழகர் பிரம்மச்சரியம், பிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் ஆகிய நான்கு ஆரிய ஆஸ்ரமங்களில் கிருகஸ்தம் நீங்கலான மற்ற மூன்றையும் சார்ந்தவர்களைக் குறிக்கும் என்று கொண்டார். இந்த ஆரிய முறையை வள்ளுவர் எங்கும் குறிக்கவில்லை. அது தமிழர் முறையும் அல்ல. எந்தத் தமிழ் நூலும் அவ்வாறு கூறவும் இல்லை. அதன் உண்மைப் பொருள் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற இயல்பான நால்வகை வகுப்பினரில் வேளாளர் நீங்கலாக ஏனைய மூவரும் என்பதே. இதே கருத்தை வள்ளுவரும் ஏனைய தமிழாசிரியர்களும் பலவிடங்களில் குறித்துள்ளனர்.

ஆர். மணிவண்ணன்,
திருவாரூர்:

மறப்பினும் ஒத்துக் கொள்லாகும்
பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்"
—என்ற குறளின் உண்மையான உரை யாது? எனது ஆசிரியர் பார்ப்பான் என்பது அந்தணரைக் குறிப்பது என்றார். அந்தணர் என்பது ஆரியர்களைக் குறிக்கும்சொல்லாயிற்றே! விளக்கம் தரவும்.

'பார்ப்பான் பிறப்பொழுக்கம்' என்பதை 'அந்தணரது உயர்ந்த வருணம்' என்று கொண்டார் பரிமேலழகர். இதில் வருணம் என்ற சொல்லும், வேறு உயர்வு தாழ்வுக் கொள்கையும் ததும்பியுள்ளன. ஆனால் திருவள்ளுவர்,

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்
சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால்,"

என்ற குறளின் மூலம் அறிவித்த கருத்துக்கு இது மாறுபட்டது. எனவே இவ்வுரை தவறானது.

இந்தக் குறட்பாவையே இடைச்செருகல், தவறான பாடம் எனக் கொள்பவர் உண்டு. இதே பாடத்துடனும் வள்ளுவர் உட்கோள்படிப் பொருள் காணமுடியும். தமிழ் நூல்களில் ஒத்து அதாவது ஓதல் என்பது கல்வியையே குறிக்கும். வள்ளுவர் எங்கும் வேதத்தைப் பற்றிக் கூறவே இல்லை. ஒழுக்கம் என்பதும் தமிழில் ஆரியருடைய சடங்கு ஒழுக்கத்தைக் குறிக்காது. வருணாஸ்ரம சாதிக் கட்டுப்பாட்டையும் குறிக்காது. அன்புசார்ந்த அறவொழுக்கத்தையே குறிக்கும்.

பார்ப்பான், அந்தணன் இரண்டும் தமிழ்ச்சொற்கள். அவை கடவுளின் பெயராகவே குறளிலும் மற்றைய தமிழ் நூல்களிலும் வழங்குகின்றன. உயர்ந்த ஒழுக்கத்தைப் பேணி உயிர்களை ஓம்புவதே குடிமரபாகக் கொண்ட தமிழ் அந்தணர் குடியையே அது குறிக்கும். கல்வி, ஒழுக்கம், ஆகிய இரண்டும் எல்லாருக்கும் பொதுச் சிறப்பு. அவற்றை அவர்கள் இன்றியமையாத் தனிச் சிறப்பாகக் கொண்டவர்கள் இந்த இரண்டிலும் கல்வியை விட்டால்கூட அவ்வளவு பெருங்கேடில்லை. ஒழுக்கம் அதனினும் இன்றியமையாதது என்பதே இக்குறட்பாவின் கருத்து. இதே கருத்துள்ள சங்க நூல் பாடல்கள் பல.

தென்றல்
போராசிரியர் மலர்!

ஏப்ரல் 12 அன்று எங்கும் கிடைக்கும்.

அறிஞர் அண்ணா
நாவலர், நெடுஞ்செழியன்
பன்மொழிப் புலவர், கா. அப்பாத்துரையார்
டாக்டர், இராசமாணிக்கனார்
அ. மு. பரமசிவானந்தம், எம்.ஏ.
தி. சுந்தரம் பி. காம்
மாசி பி. ஏ.

முதலியோர்கள் எழுதுகிறார்கள். மலர் சிறந்த முறையில் தயாராகிறது.

விபரங்களுக்கு:

தென்றல்
சென்னை-6.

வெண்பாப் போட்டி

5. கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

பட்டினியால் வாடுகின்ற பஞ்சையிடம் உன்பசிக்கு
சொட்டத்தான் பாலேது சொர்ணமே!--கொட்டாமற்
பொய்த்திட்ட என்மார்பை பவளவா யோயுமட்டும்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

—வெ. வெங்கடசாமி. பாளையம்பட்டி.

★

ஆக்க மழிந்து அகலாத ஏழ்மையால்
தூக்கம் குறைந்து துயருற்று--சாக்காடு
எய்துமோ வென்றெண்ணி ஏக்கமுறும் மானிடரை
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

—என். சுப்பிரமணியம், அருப்புக்கோட்டை.

★

ஓடி உழைத்து ஒருபிடி சோறேனும்
தேடி எடுத்துவந்து தன்பதியை--நாடியவன்
செய்வேலை சோர்வுநீங்க சேர்ந்துண்ணும் பூங்கொடியை
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

—அ. திங்கள்கொண்டான், கடலூர்.

★

தேனூறும் சொல்கேட்டு தேகமெலாம் பூரிக்கும்;
ஊனோடும் இன்பமுறும் உள்ளமெலாம்;--பூநாறும்
செய்யவாய் மக்கள் சிறுகுதலைப் பேச்சறிந்து
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

—நல்லூர்க்கிழான், தி. வெ. நல்லூர்.

★

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனு
மொண்டொடி கண்ணே யுளவாமக்--கண்ணுட்டி
பெய்யெனப் பெய்யு மழையாத லாலவளைக்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

—மாதவராசு, சேலம்.

★

நல்லார் குணம்நீங்கி, நச்சரவ நீர்வீழ்ந்து,
பொல்லா புகைசூழு(ம்) ஆரியமாம்--அல்லலே
செய்யும் அதைவிடுத்து செந்தமிழர் சீர்குணத்தை
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

—தங்கநிழல். சென்னை 1.

★

ஆருயிர்ச் செந்தமிழின் ஆக்கம் குறிக்கோளாய்
சீருறத் தொண்டாற்றும் செம்மனத்தார்--பாருக்குள்
செய்யும் செயலில் சிறுகுறைகள் சேர்ந்தால்நீ
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

—கோம்பைச்சீரான், கோம்பை.

★

ஊன்வேண்டி நீள்தொலைவில் ஓய்ந்துமிகச் சென்றோர்கள்
வான்பறவை போலவே வந்திடுங்கால்--தேன்மொழியே
செய்வாய் நலந்தன்னை! சீரிழந்த அன்னோரைக்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

—வெ. இராசசேகரன், ஆயக்குடி.

★

துன்பம் பலவந்து சூழ்ந்திடினும், பொற்றொடியே
அன்பின் பிடியை அகற்றாதே--உன்விழியால்
எய்யாமல் எய்தனையே! எந்தன் உளப்பாங்கைக்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

—வெண்ணெய்வேலன், தி. வெ. நல்லூர்.

★

மரக்கதவில் சாய்ந்தென்னை மாலையில்கா ணற்போய்
மறத்தோளில் சாய்ந்தின்பில் மாய்க்க--பிறைநுதலே
பொய்யாத நம்காதல் பூத்திலங்க என்னுளத்தைக்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்!

—மதுரைவேலவன், மதுரை.

★

திருத்து(ம்)அறி வூட்டும்; செயல்புதுக்கும்; உள்ளக்
கருத்து நலன்விளங்கக் காட்டும்:--திருத்தமிழர்
மெய்யாகக் கொண்டுரைத்த மேலான சொற்களைநீ
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

—ச. வைத்தியநாதன், சென்னை.

உண்ண உணவும் உடுக்க உடையுமின்றி
கண்ணுறங்க நன்மையாம் கற்றரையை--நண்ணிடும்
உய்ய வழியில்லா நற்குடியை உத்தமனே!
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

—துரை. சுப்பிரமணியன், மேலைச்சிவபுரி.

★

ஊர்ப்பானை யைச்சுரண்டும் பார்ப்பான் உரைக்கின்ற
கார்ப்பான கொள்கைகளைக் கைவிட்டு--நேர்மையுடன்
பொய்யா மொழியின் புதுமைக் குறள்மலரைக்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

—குறுவழுதி, கருங்காலிப்பட்டு.

★

தெள்ளமிழ்தத் தேன்மொழியாம் தேசுமிகு தென்தமிழை
தெள்ளுகுற ளாலளித்த வள்ளுவன்போல்--ஒள்மதியே
மெய்யற நூலமைத்துக் காப்பளிப்பார் தம்முறவை
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

—எய்ச். சையத்அமீத், தலைஞாயிறு.

★

வண்ணப்பூ நீசூட வாங்கிவர வில்லையென்றுன்
கன்னம் சிவந்ததுவோ கார்குழலே--என்னைப்பார்
பொய்யாத அன்பெனும் பூவிருக்கு மென்னெஞ்சில்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

—அ. ரா. அ. கோபிசெட்டிபாளையம்.

★

இனிமை நனிமிகுத்(து) இன்பம் பயக்கும்
தனிமைச் சுவேசேர் தமிழெனன்--கனிமொழியை
மெய்யாய் வளர்த்துவரும் மேதைகளின் கொள்கைகளைக்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

—ஜி. கணேசன், தேவலாபுரம்.

★

அன்பில்லா நல்லொழுக்கம் ஆர்வமிலா நற்சிந்தை
என்பில்லா மெய்யொக்கு மென்றதினால்--நண்பனுக்கு
பொய்யா மொழிவழியை போதித் தவன்குறையை
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

—ல. சேதுராமன், கரூர்

★

கொல்லாமற் கொல்லும் கொடியவளே என்னருகில்
நில்லாமல் என்னுயிரை யீர்ப்பவளே--நல்லெழிலே
பொய்யாத காதலெண்ணி பொய்யாத என்னன்பைக்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

—க. மதிவாணன், திருவையாறு:

★

காமர் கயல்விழியால் காளையரைக் கொல்லுமிளம்
பாவாய்! எனது பசிதீர்ப்பாய்--சாவடைவேன்
மெய்யாக நீயிலையேல்! வேகுமென் நெஞ்சைநீ
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

—இரா. சண்முகம், பண்ணைக்காடு.

★

வண்ணமலர்ச் சோலை வசந்தத்தின் மாலையிலே
எண்ணமுயர் இன்ப எழிலரசி!--பண்ணிகர்த்த
மெய்யாம் இலக்கிய மேன்மைதரு தென்றலதைத்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

—கோ. குப்புசாமி, ஆசிரியர், கோனூர்.

★

மன்ற தெளிந்து மனஒருமைப் பட்டபின்னர்
குன்றி அளவேனும் கோணாது--என்றென்றும்
பொய்யா தொழுகும் புரைதீர்ந்த நட்பினிதழ்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்

—முருகு, வரகூர்.

★

பங்குனியில் வந்திடுவேன்; பெண்ணே பனிநிலவில்
தங்காதே, என்றுரைத்துச் சென்றனையே--மங்கியுடல்
தொய்கின்றாள்! மங்கைமுன் தோன்றியச் செம்மலரைக்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

—அ. இரத்தினசாமி, கோவிலூர்.

★

முன்பின்னே தானறியாள் மொய்குழலாள், சோர்வுற்றாள்
என்பின்னே வாவென்றாள்; என்றாய்நீ--அன்புன்மேற்
பெய்யாமல் பெய்திட்ட பேரமர்க்கண் தீங்கனியைக்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

—அ. சுருளியாண்டிப் பாவலர், கோம்பை.

★

தெள்ளுதமிழ் அத்தனையும் தேனல்ல வாயிடினும்
உள்ளத் தினிப்பேறும் உண்மைபோல்-.வள்ளுவனின்
பொய்யா மொழியாம் புனிதக் குறள்மலரைக்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்

—டி. வி. பச்சையப்பன், மதுரை.

Edited and Published by Kannadasan, 2/127, Monnt Road, Madras-6. Printed